
ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 1998



# கலசம்
# KALASAM

தீபாவளிச் சிறப்பிதழ்

லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00




Indian Musical Instruments

7 DAYS A WEEK, 11.00AM TO 7.00PM.

JAS Musicals Ltd

108A The Broadway, Southall Middx. UB1 1QF U.K. Tel: 0181 574 2686 Fax: 0181 571 7445

தரமான வாத்தியக் கருவிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள்
நேரில் வாருங்கள் அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்

மணி 5

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

ஒலி 24

# கலசம்
# KALASAM

ஐப்பசி–கார்த்திகை–மார்கழி 1998

# "நான்" போனால் நான் வருவேன்

மனதுக்குள் பல நெருடல்கள்! பல மனிதர்களைச் சந்திக்கும் போது ஏற்படும் மன உளைச்சல்கள்! போட்டிகள் பொறாமைகள் நிறைந்த மனித உள்ளங்களின் சந்திப்புகள்! இவைகளிலிருந்து வெளிப்பட முடியாமல் தத்தளிக்கும் மனங்களின் துயரங்கள்! கடவுளை வைத்து வியாபாரம் பண்ணும் மனிதர்களின் சல்லாபங்கள்! மனிதனை கடவுளிடமிருந்து பிரித்து அர்த்தமற்ற ஒரு உலகத்தில் சஞ்சரிக்க வைக்கும் புராணங்கள்! இப் புராணங்களுக்கு வக்காலத்து வாங்கும் அறிவினை அடகுவைத்துவிட்ட மனிதர்கள்!நான்,நான் என்று அலையும் மனிதனின் அகங்காரக் கூச்சல்கள்! சிந்தனைகளிலிருந்து விலகி வெறும் மரபுக் கூச்சல்களுக்குள் அடங்கி முன்னே போக முடியாமல் தவிக்கும் உலகத்தின் வேதனையான கோலங்கள்! படைத்தவனுக்கே மொழி கற்பிக்கும் சில புத்திசாலித்தனமான கர்வம் நிறைந்த மனிதர்கள்! இறப்பில் துயரத்தைக் கண்ட மனிதன் இப்போ இறப்பில் சந்தோசத்தை அனுபவிக்கும் புதுமையான காலங்கள்!

ஏன் இவை நடக்கின்றன? எப்படி இவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன?

வாழ்க்கையின் பாதையாக நிர்ணயிக்கப்பட்ட சமயம் ஏன் இதற்கு விடைகாணமுடியாமல் தவித்து நிற்கின்றது? மனிதனுக்காக உருவாக்கபட்ட சமயங்கள் மனிதனைவிட்டு வெகுதூரம் சென்று கடவுளோடு ஐக்கியமாகிவிட்ட விபத்தினாலா இவை நடக்கின்றன?அல்லது கடவுளரை உருவகப்படுத்தி கிரியைகளால் அவனை ஸ்தம்பிக்கச்செய்து கடவுளைப்பற்றிய தேடலிலிருந்து தடுத்து நிறுத்தியதாலா இவைகள் நடக்கின்றன?அல்லது சமயத்தையே கடவுளாகக் கொண்ட அறிவிலித்தனத்தாலா இந்த நிலைகள்!

**நான்** என்கின்ற அகந்தையோடு நாம் உலவுகின்ற கீழ் நிலையினாலா இந்த அவலநிலை!

சமயமே கடவுளல்ல என்று அடித்துக்கூறமுடியாமல் கோழைகளாக நிற்கின்ற பரிசுகேட்டினாலா இவைகள் நடக்கின்றன? கடவுள் சிலையை நான்தான் தொடலாம் என்கின்றது ஒரு கூட்டம்! கடவுளுக்கு அருகில் நாங்களே செல்லலாம் என்கின்றது இன்னொரு கூட்டம்! இப்படி நான்–நான் என்று கூறுகின்ற நிலை இருக்கும்போது எப்படி ஆண்டவனது நான் வருவேன் ஓசை எம்முள் ஒலிக்க முடியும்?

இறைவனுக்கு எல்லாமொழியும் தெரியுமாம். எவ்வளவு கர்வமான எண்ணம் இது.

இறைவனையும் தன்னையும் சமப்படுத்துகின்ற அபத்தமான ஒரு அகங்கார எண்ணம்!

இறைவனுக்கு ஏன் மொழி அப்படியே நான் பேசும் மொழியைப் பாவித்துத்தான் தொடர்புகொள்வான் என்றால் அவனின் அற்புதசக்தியை நிராகரிக்கின்றதாகிவிடுமே?


இதற்கெல்லாம் காரணம் எம்முள்ளே அடங்கி இருக்கின்ற இந்த **நான்** தான் என்பதை ஏன் நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம்!

கலசம் தடுமாறுகிறதா என்று கேட்கின்றார்கள்.! எப்பிடித் தடுமாற முடியும்? தடுமாறவேண்டிய தேவை அதற்கில்லையே! நல்ல உறுதியான அத்திவாரத்தில் கட்டப்பட்ட சிந்தனைமாளிகைதானே கலசம். உயர்ந்த எண்ணங்களின் எழுத்துருவம்தான் கலசம்!தயவுசெய்து விட்டுவிடுங்கள்! கருத்தோடு மோதுங்கள்! கலசத்தோடு மோதாதீர்!

–ஆசிரியர்–

# உள்ளே......


| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 01 |
| உள்ளே............. | 02 |
| இவர்களுக்கு முத்தி | 03 |
| பிரதோச விரத மகிமை | 04 |
| திருமூலர் | 05 |
| இறைவன் | 08 |
| எழுதினவன் ஏட்டை | 11 |
| நெஞ்சே | 14 |
| சிறுவர் கலசம் | 17–24 |
| கட்டுரைப்போட்டி | 25 |
| திருமுருகாற்றுப்படை | 26 |
| நன்றி மறவாமை | 30 |
| அருள்மிகு | 32 |
| இலண்டன் தமிழ் | 33 |
| நகுலேஸ்வர | 34 |
| திருவரங்கம் | 37 |
| சங்கச் செய்திகள் | 40 |

**அன்பு வாசகர்களுக்கு எமது அன்பு நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்**


**ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன்** **துணை ஆசிரியர் : திரு க. ஜெகதீஸ்வரன்**

**நிர்வாகம்: திரு வ.இ. இராமநாதன்** **துணை நிர்வாகம்: திரு சிவ. அசோகன்**

நிர்வாகக்குழு

திரு. ந. சிவராசன், திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்

திரு சி. அற்புதானந்தன், Dr.ந. நவநீதராசா, திரு இ. சிவானந்தராஜா, திரு சி. தர்மலிங்கம்

வெளியீடு : சைவ முன்னேற்றச் சங்கம்(பிரித்தானியா),

42, Stoneleigh Road, Clayhall, Ilford Essex, IG5 0JD, England Tel/Fax:0181 550 4233

இலங்கையில் தொடர்பு: Mr. K. Balasubramaniam, 131 Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka

ஜேர்மனியில் தொடர்பு: Mr. T. Lambotharan, Kolner Str 298, 51645 Gummerbach, Germany

டென்மார்க்கில் தொடர்பு: Mr.R.Rajendram,Bjergmarken 21.ST,TV,4300 Holbeck,Denmark

Mr.K.Mohanarajah, Gronnehave Strade, 16 st.th 4500 Nykobing .ST Denmark

# இவர்களுக்கு முத்திவேண்டும்

எந்தவத்தின் தாயார் ஞானக்
கந்தசஷ்டி கவசம் பாடி
வந்தனைகள் செய்தெமக்கே
சிந்தனையைத் தெளியவைப்பாள்!

முந்தியவள் முன்னே எங்கள்
மூதாட்டி பாட்டி வெள்ளைத்
தந்தமுகன் துதிகள் பாடி
சகலரையும் விழிக்கச் செய்வாள்!

சித்தியொடு பெரிய தாயும்
சிவபுராணத்தைப் பாடிச்
சித்தமது மெய்ஞ்ஞானத்திற்
திளைத்திடவே செய்குவார்கள்

பெற்றபெரும் பேறாய் மாமி
பெரியபுராணத்தைப் பாடி
முற்றுமவை நாம் விளங்க
முறையோடு பொருளும் சொல்வாள்

தங்கையரும் தமக்கைமாரும்
மங்கையராம் அயலுள்ளாரும்
சங்கமித்து அரங்கன் மாலின்
சரணங்கள் பாடித் தொழுவார்

அண்ணிமார் மதினிமார்கள்
அனைவரும் ஒன்றாய்க் கூடிப்
பண்ணுடன் பஞ்சபுராணம்
பாடுவார் பக்தியோடு

அன்னையர் சங்க மாதர்
அன்றாடம் வந்து வந்து
அன்னைமா காளி மாரி
அம்மானை பாடுவார்கள்

இத்தனையும் எங்கள் வீட்டில்
என்றென்றும் காலை நேரம்
சித்தமுடன் நிகழும் தெய்வத்
திருவருளின் பக்திக் கோலம்!

வஞ்சமிலா நெஞ்சத்தோடு
வழிபாடு செய்யும் இவர்கள்
தஞ்சமெனும் இறைவன் முத்தி
தானடையப் பணிகின்றேனே!

காரைக்கால் அம்மையாரும்
கலிப்பகையார் துணைவியாரும்
வாலைப் பெண் மீராதானும்
வானடைந்து முத்தி பெற்றார்!

சூடிக்கொடுத்த கோதை
சுந்தரியாம் நாச்சியாரும்
நாடிக் களித்து மாலின்
நல்லடியில் முத்தி பெற்றார்!

ஆங்கவர்கள் பெற்ற முத்தி
அஞ்சலிக்கும் என் குலத்தார்
ஈங்கடைய வேண்டும் இறைவா
இந்துமறை நீடத்தானே!



–சீமைக்கீரன்–

# பிரதோஸவிரத மகிமை

இறைவனின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பலவகையான பூஜைகள் நடத்தப்படுகின்றன. அவற்றுள் சிறப்பாகக் கருதப்படுவது பிரதோச நாள் வழிபாடாகும். இது பற்றி முருகபக்தரான திருமுருக கிருபானந்தவாரியார் கூறுவதென்ன? ஒருவர் முற்பிறப்பில் தவம் செய்து இருந்தாலன்றி பிரதோஷவிரதம் அனுஷ்டிக்க முடியாது. விரதங்களில் சிறந்தது பிரதோஷம். இரத்தினங்களில் சிறந்தது மாணிக்கம். நதிகளில் சிறந்தது கங்கை. தெய்வங்களுள் சிறந்தவர் சிவன். அந்த சிவனைப் போல கருணை மிக்க தெய்வம் உலகில் கிடையாது என்கிறார். அவதார மூர்த்தியாகிய கிருஷ்ணபெருமான் பிரதோச வழிபாட்டின் மகிமையை உணர்ந்து பாரதப் போருக்கு வெற்றி தேட அதனை கடைப் பிடித்தார். மக்களாகிய நாமும் பிரதோஷ வழிபாட்டின் மகிமையை உணர்ந்து கடைப்பிடிக்கவேண்டும். பிரதோச காலத்தில் பேசும் நந்தி, சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி , கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி, மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி, வருங்காலத்தை நலமாக வைக்கும் நந்தி, கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி விதியினை மாற்றிவிடும் நந்தி, பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி, புகழ் குவிக்க எம் இல்லம் வருக நந்தி என்று ஒரு பாடல் நந்தியின் பெருமைகளைக் கூறுகின்றது..

திருப்பாற்கடலுள் எழுந்த ஆலகா தேவர்கள் பிரமனிடம் தஞ்சம் புக பிரமன் விஷ்ணுவிடம் தஞ்சம் அடைந்தார். அவர்களைக் காப்பாற்றுவதற்காக உறுதியளித்த காத்தல் கடவுளாம் விஷ்ணு ஆலகால விடத்தை நெருங்கியதும் அதன் விடக்காற்றால் தாக்கப்பட்டார். இதனால் அவர் உடலில் விடம் ஏறி நீலம் பாலிக்கத் தொடங்கியது. இதனால் தான் விஷ்ணு கருநீல மேனியைப் பெற்றார். இத்தகைய கொடிய விடத்தைக் கருணைக் கடலாம் அந்த சிவன் உண்டார். சிவன் ஆனந்த மிகுதியால் நந்தியின் கொம்பிடை தாண்டவம் ஆடினார். பிரமன் தாளமிட சரஸ்வதி வீணை வாசித்திட இந்திரன் குழல் ஊத, இலச்சுமிதேவி பாடல்கள் பாட, திருமால் மத்தளம் கொட்ட, நந்தியின் கொம்பிடை இறைவன் ஆடுகின்றான். மத்தளம் கொட்ட திருமால் கைலாயம் சென்றதனை நினைவூட்டலே இன்றும் பிரதோஷ காலத்தில் திரைச்சீலையிட்டு பெருமாள் கோவில் மூடப்படுகின்றது. திருமால் பிரமன் முதல் சகல தேவர்களும் கந்தருவர்களும் உலகம் முழுவதும் பிரதோச காலத்தில் சிவனை வழிபடுதல் வழக்கமாகும். சிவனுடைய சந்நிதிக்குச் சென்று சிவனை வழிபட்டு அவர் அருளைப்பெற நாம் முயற்சிக்க வேண்டும். இப்பிரதோச காலம் மாலை 4.30ற்குமேல் 6.30 மணிக்குள்ளாக. இதனை துல்லியமாக கணக்கிட்டு மாலை 5.45–6.30 வரை என்பர். இந்த நேரம் நந்திதேவருக்கு காப்பரிசி அறுகம்புல் கொடுத்து பார்த்து ஹரஹர மகாதேவா என்று தரிசிப்பர். சிவபிரான் பிரதட்சண வழிபாட்டில் தான் பிரீதியடைகின்றார் என்பதனை மறக்கக் கூடாது. பிரதோச காலத்தில் இதனை சோம சூத்திர பிரதட்சணமாக செய்ய வேண்டும். இதுவே அனைத்திலும் சிறந்த பிரதட்சணமாகும். மாமேரு சித்திர்கள் சிந்தித்தளித்த இந்த சோமசூத்திர பிரதட்சணத்திற்கு இணையான வரங்களையோ ஆசிகளையோ தரவல்ல பிரதட்சண முறை எதுவும் கிடையாது.

**சொல்லில் அடங்கா சுடர் உருவே**
**சொல்லில் அடங்குமோ நின் கருணை**
**சொல்லப் புகுந்தால் சொல்லெல்லாம் ஆகி சொல்லும்**
**சொல்லுற்றதே நின் ஆடல் தானே**

பிரதோச வழிபாடு முடிந்து புறப்பட முன்பு நடராஜ மூர்த்தியைத் தரிசிக்க வேண்டும்.அப்போது தான் பிரதேச வழிபாடு சம்பூர்ணமடைகின்றது.

## பலன்

நந்திதேவர் ஒருவருக்கு மட்டுமே நமது விதியை மாற்றும் தகுதி உண்டு. சனீஸ்வரனின் தொல்லை , தோசம் போகும்

சோம சூத்திர பிரதட்சணம் கடன் தொல்லை நோய்கள் தீர்க்கும்

பிரதோச தினத்தன்று ஆலயதரிசனம் செய்தல் ஒரு வருடம் பூசித்த பலன் கிடைக்கும்.

மகா(சனி) பிரதோசத்தன்று ஆலய தரிசனம் செய்தல் 5 வருடம் பூசித்த பலன் கிடைக்கும்.

தொடர்ந்து 5 வருட காலம் நித்திய பிரதேச வழிபாடு செய்தால் முத்தி கிட்டும்.

# திருமூலர்

திருமூலர் திருக்கைலாயத்தில் வாழ்ந்த சிவநாதசித்தருள் ஒருவர். திருநந்தி தேவரின் மாணாக்கர். சிவயோகர். பதஞ்சலி வியாக்ரமர். முதலிய சித்தர்களுடன் கற்றவர். தமிழ் முனிவர் அகஸ்தியரின் நண்பர்.

திருமூலர் நந்தி அருளால் வழியறிந்து மலத்தை வென்றார். தனது இதயமலரில் சிவநடனத்தைத் தரிசித்தார். சிவதத்துவத்தை உணர்ந்தார். இவருடைய காலம் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும். பிறப்பு இறப்பு அற்ற இராப்பகல் அற்ற இடத்தில் தேவர்கள் போற்றும் பதத்தில் ஞானப்பால் உண்டு வாழ்ந்தார்.

திருமூலர் சுந்தரநாதன் என்னும் பெயருடன் பதஞ்சலி முதலிய சகமாணவர்களுடன் திருக்கைலாயத்தினின்று தென்னாடு வந்து தில்லையம்பலத்தில் (சிதம்பரம்) இறைவனின் திருநடனத்தைத் தரிசித்து மகிழ்ந்தார். பின் கைலை ஏகித் தவத்தில் இருந்தார்.

செப்பும் சிவாகமம்
என்னும் பெயர் பெற்றும்
அப்படி நல்கும்
அருணந்தி தான் பெற்றுத்
தப்பிலா மன்றில்
தனிக்கூத்தும் கண்டபின்
ஒப்பில் ஏழுகோடி
யுகம் இருந்தேனே.

என்னும் அவரது திருவாக்கினால் இதனை அறிகின்றோம்.

இரண்டாவது முறை தனது நண்பர் அகத்திய முனிவரைக் காணப் பொதியமலை நோக்கிப் புறப்பட்டார். வழியில் திருக்கேதாரத்தை வழிபட்டார். பசுபதி நேபாளத்தைப் பணிந்தார். கங்கையில் நீராடிக் காசியை வணங்கினார். திருப்பருப்பதம், திருக்காளத்தி, ஆலங்காடு திருஏகாம்பரம் முதலிய தலங்களை வணங்கிக் காஞ்சியை அடைந்தார். பின் திருவதிகையை வணங்கித் தில்லையம்பலம் அடைந்தார். ஆனந்தக்கூத்தைப் பலநாட் தரிசித்து இருந்தார். பின் பொன்னி நாட்டை அடைந்தார்.. காவிரிக் கரையில் அந்தணர்கள் நிறைந்த சாத்தன் ஊரை அடைந்தார். அங்கு கைத்தறி வேலை செய்வோரும் ஓர் பகுதியில் வாழ்ந்து வந்தனர். அக்குடும்பம் ஒன்றில் பிறந்தவன் தான் மூலன். மூலன் தறிவேலை செய்வதில்லை. அவ்வூரிலுள்ள சடைச்சாமியாருடன் சுற்றித் திரிவான். அவர் மூலனாருக்குச் சமஷ்டி அன்பைப் போதித்தார். சகல உயிரினங்கள், மரம், செடி கொடிகளில் உள்ள உயிர் தான் உன்னிடத்திலும் உள்ளது. இதோபார் இந்த நாயில் உள்ள ஆத்மா தான் உன்னிடமும் இருக்கிறது. இவ்வுலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் உன்னிடம் பிறந்தவர்கள் ஆவார்கள். நீ வேறு அவர்கள் வேறு அல்ல. நாம் இதனை உணர்ந்து அனைத்தையும் நேசிக்க வேண்டும் என்பார். இதனால் மூலனின் மனதில் அன்புப்பிரவாகம் வழிந்தோடியது.

ஒரு நாள் சடைச்சாமியார் தான் காசிக்குப் போவதாகச் சொல்லி சாத்தான் ஊரைவிட்டுப் போய் விட்டார். செய்வதறியாது ஏங்கி வீட்டின் உள்ளே சோர்ந்து உட்கார்ந்து விட்டான் மூலன். என்னடா இது தறி வேலையும் செய்யாது நேரத்தை வீணே கழிக்கின்றாய் என்று தந்தையார் கடிந்தார்.

தாயார் மூலா சும்மா இருக்கின்றாய். எமது இரு பசுக்களையும் ஓட்டிச் சென்று மேய்த்துவா புண்ணியமாய்ப் போகும் என்றாள். மூலனும் ஒப்புக்கொண்டான். சாத்தானூர் எல்லையில் உள்ள புல்வெளிக்குப் பசுக்களை ஓட்டிச் சென்று மேயவிட்டான். அந்தப் பசுக்களோடு அன்பாகப் பேசுவான். பசுக்கள் தலையை அசைத்துக் காட்டும். பசுக்கள் செழித்து வளர்ந்து நிறையப் பால் கொடுத்தன.

இதைக் கண்ணுற்ற அயலவரும் மூலனைக் கெஞ்சி தமது மாடுகளையும் அவனிடம் ஒப்படைத்தனர். ஓர் மந்தை மாடுகள் சேர்ந்துவிட்டன. மூலன் மாடுகளை மிக அன்பாகப் பராமரித்தான். மாடுகளைப் பெயர் சொல்லி அழைப்பான். உடனே அவை ஓடிவரும் . அவன் இடும் கட்டளைகளை நிறைவேற்றும். மூலனின் வாழ்க்கை சந்தோஷமாகக் கழிந்தது. காலம் செல்லப் பெற்றோர் மூலனிற்குத் திருமணம் செய்து வைத்தனர். மூலனது நாட்கள் சந்தோஷமாகக் கழிந்தன. அனைத்து ஜீவராசிகளுடனும் அன்போடு பழகினான்.

ஒரு நாள் மாடுகளை மேயவிட்டு ஓர் மரத்தடியில் படுத்திருந்த வேளை மூலன் இறந்துவிட்டான். மாடுகள் எல்லாம் அவனைச் சூழ்ந்து நின்று கண்ணீர் விட்டுக் கதறின. சில சோர்ந்து

விழுந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் திருமூலர் (சுந்தரநாதன்) அந்தப் பக்கம் வந்தார். மாடுகளின் சோகம் அவர் உள்ளத்தைத் தொட்டு உருக்கியது. மாடுகளின் துன்பத்தை நீக்க திருவுளம் கொண்டார். தனது உடலை வேறு ஓர்

இடத்தில் பத்திரமாக வைத்து விட்டு மூலனின் உடம்பிற் பிரவேசித்தார். முனிவர் பரகாயப் பிரவேசம் செய்தார். மாடுகள் சந்தோஷத்துடன் மூலனைச் சுற்றி ஓடி விளையாடின.

இதற்குள் சூரியனும் அஸ்தமிக்க மூலன் உடல் தாங்கிய முனிவர் தமது மாலைக் கடன்களை முடித்தார். பசுக்களும் தத்தம் கன்றுகளை நினைத்துச் சாத்தன் ஊரை நோக்கி நடந்தன. அவற்றின் பின்னே மூலரும் சென்றார். மூலர் பசுக்கள் தத்தம் மனை சேரக் கண்டார். மூலர் எவ்வீட்டின் உள்ளும் நுழையாது புறத்தே நின்றார்.

மூலனின் மனைவி பொழுது சாய்ந்து இருட்டியும் தனது கணவன் வரவில்லையே என்ன நேர்ந்ததோ? என்று மனம் பதை பதைத்துக் கணவனைத் தேடிச் சென்றாள். சிவயோகியார் மூலனின் உடல் இருந்த இடத்தை அடைந்தார். தனது கணவனின் உடம்பில் தோன்றிய உணர்வு மாற்றத்தைக் கண்டாள். இவருக்கு ஏதோ தீங்கு நேர்ந்து இருக்க வேண்டும் என்று எண்ணினாள். ஏன் இப்படி நிற்கிறீர்? வீட்டுற்கு வாரும் என்று அழைத்துக் கிட்ட வந்தாள். திருமூலராகிய சிவ யோகியார் அவள் தன்னைத் தீண்டாதவாறு தடுத்து நிறுத்தினார். ஐயோ இஃது என்ன? என்ன செய்கிறீர் என்று கூறி மனம் வருந்தினாள். சிவயோகியார் அவளைப் பார்த்து நீ எண்ணியபடி உனக்கு என்னுடன் எத்தகைய உறவும் இல்லை என்று கூறி அவ்வூரில் உள்ள பொதுமடத்திற் புகுந்து நிஷ்டையில் அமர்ந்து சிவனுடன் ஐக்கியமானார்.

மூலனின் மனைவி மனம் வருந்தி

அன்றிரவு தூங்காது துயர் உற்றாள். பொழுது விடிந்ததும் உற்றார் உறவினர் அயலவரை அழைத்துக் கொண்டு சிவயோகியாராகிய திருமூலர் இருந்த இடத்திற்குச் சென்றாள். தனது கணவனின் நிலைமையை எடுத்துக் கூறினாள். அழுதாள், தொழுதாள், அலறினாள், சிலர் முனிவரின் நிலைமையை நன்குணர்ந்தனர். அம்மா இது பித்தத்தினால் ஏற்பட்ட மயக்கமன்று. மனமாறாட்டம் கொண்டவர் அல்லர். எல்லை அற்ற பெருமை பெற்ற சிவஞானச் செல்வர். பற்று அறுத்தவர். முற்றும் துறந்தவர். அவர் நிஷ்டையைக் கலைக்காதே என்று தேற்றினார்கள். அவள் துன்பம் தாங்காது மயக்கமுற்றாள். அங்கிருந்தவர்கள் அவளைத் தேற்றி அழைத்துச் சென்றனர்.

சாத்தன் ஊர்ப் பொதுமடத்தில் நிஷ்டைகலைந்து எழுந்த சிவயோகியார் முதல் நாட் பசுக்கள் வந்த வழியே சென்றார். தமது உடம்பை மறைத்து வைத்த இடத்தை அடைந்து தமது உடலைத் தேடினார். வைத்த இடத்தில் அது காணப்படவில்லை இறைவன் தெள்ளு தமிழில் திருமுறைப் பொருளைப் பாடவைக்கத் திருவுளம் கொண்டு உடலை மறைத்தருளினார். இறைவனின் திருவிளையாடல்களை ஞான அறிவால் உணர்ந்தார். முனிவர் பழைய மூலனாகவே நடந்து திருவாவடுதுறையை அடைந்தார். தம்மை பின் தொடர்ந்த சாத்தனூர் மக்களை நோக்கித் தமக்கும் அவர்களுக்கும் எத்தகைய உறவும் இல்லை எனக் கூறினார். அது எப்படி? நீ மூலன் இல்லையா? எங்கள் குலத்தில் பிறந்தவன் தானே மூலன் என்றனர். இருக்கலாம் ஆனால் இறைவன் திருவுளப்படி செல்கின்றேன் நான் என்று கூறிப் புறப்பட்டார்.

திருவாவடுதுறைக் கோயிலை அடைந்து அம்மை அப்பரை வணங்கி கோயிலின் மேற்குத் திசையில் இருந்த அரசமரத்தடியில் சிவயோகத்தில் அமர்ந்தார். அறிவோன் , அறிவு ,அறி பொருள் அனைத்தும் அவனே என்று உணர்ந்தார். உள் ஆவியும் மதியும் உற்றெழுந்து ஒளிரப் பெற்றார். அதனால் சக்திக்கனல் பாய்ந்து மயிர்க்கால் தோறும் அருள் ஒளி வீசப் பெற்றார். இது குருநந்தி தேவரின் அருளினால் கிடைத்த பெரும்பேறு என்று குருவிற்கு நன்றி செலுத்தினார்.

நந்தி அருளாலே மூலனை நாடிப் பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான் இருந்தேனே

என்று திருமூலரின் கூற்றினால் அறிகிறோம்.

நந்தி தேவரின் அருளினால் சிவஞான சித்தி பெற்ற திருமூலர் நான் எனது அற்ற மனம் உயிர் உடல் வாதனை அற்ற சிவயோக நிலையை அடைந்தார்.

நான் பெற்ற இன்பம்

இவ்வையகமும் பெறுக என்ற உணர்வினால் பிரமத்துடன் இரண்டறக் கலக்கும் சாதனங்க

ளைனத்தையும் திவ்விய தமிழில் விளக்கமாகத் திருமந்திரப் பாடல் களாகப் பாடத் தொடங்கினார்.

**நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான் பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்**
**ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான் பற்றப் பற்றத் தலைப்படுத்தானே**

இதுவே திருமந்திரத்தின் கருப் பொருள்(உட்பொருள்) ஆகும். சிவயோகப் பெருவாழ்வு எய்திய திருமூலநாயனார் பிறவிப் பெருங்கடலை நீந்தவும் உலக இன்ப துன்பங்களை நீக்கி நாம் உய்யும் பொருட்டு சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகை மலர்களால் திருமந்திர மாலையை இறைவன் திருவடிக்கணிந்து போற்றும் நிலையில்

**ஒன்றவன்தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றனுள் நான்குணர்ந் தான்ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந் தான்உணர்ந்து எட்டே**

என்னும் பாடலை முதலிற் பாடினார். பின் சிவயோகத்தில் அமர்ந்து கண்விழிக்கும் போது அடுத்த பாடலைப் பாடுவார். இப்படியாக மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்களைப் பாடி நிறைவு செய்தார்.

திருமூலநாயனார் சிவபெருமான் திருவடி நீழலில் என்றும் பிரியாது உறையும் பேரின்ப வாழ்வைப் பெற்று இனிது வாழ்ந்தார். திருமூலருக்கு ஏழு சீடர்கள் இருந்தார்கள். மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன், இந்திரன் சோமன் , பிரமன், உருத்திரன், சத்துருக் காலாங்கி கஞ்ச மலையானொடு இந்த எவரும் என் வழியாமே என்னும் திருமூலர் வாக்கினால் அறிகின்றோம்.

திருமூலர் பரமுக்தி அடைவதற்கு முன் தனது சீடர் எவருக்கும் பதி, பசு , பாசம் இலக்கணங்களைப் புகட்டினார். திருமந்திரப்பாக்கள் வரையப்பட்ட சுவடியைத் திரு வாவடுதுறை கோயிலின் முன் இருக்கும் பலிபீடத்தின் கீழ் வைத்து விட்டுப் பரமுக்தி எய்தினார்.

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே** என்ற திருமூலர்வாக்கினால் இறைவன் திருமந்திரப் பாக்களைப் பாடுவதற்காகவே திருமூலரை உலகிற்குப் படைத்தார் என்பது தெளிவாகின்றது. திருமூலர் முன்வினை முடிச்சை அவிழ்த்தவர் பிள்ளை வினையைப் பிடித்துப் பிசைந்தவர் தவத்தின் பெருமைக் கெல்லாம் உணர்ந்த தவச் சக்கர வர்த்தி. சிவபெருமான் அவருக் குத் தவபெருமான் என்ற பட் டத்தை அளித்துள்ளார். திருமூல ருடைய அருளைக் குருவழியாற் பெறலாம். குரு கிடைக்கவில்லை என்றால் திருமந்திரப் பாடல்கள் ஒவ்வொன்றையும் தியானப் பொரு ளாகக் கொண்டு தியானிக்க வேண்டும் அருளின் அளவு தியானத்தைப் பொறுத்தது.

**அப்பன் நந்தியை ஆரா அமுதனை**
**ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை**
**எப்பரி சாயினும் ஒத்துமின் ஏத்தினால்**
**அப்பரிசீசன் அருள் பெறலாமே.**



# சாதிக்கப் பிறந்தவள்



ஒரு மனிதன் சாதாரண மனிதனைவிட ஏதோ ஒரு விதத்தில் சக்தி வாய்ந்தவனாக இருந்தால் அவனுக்கு ஆண்ட வனின் அனுக்கிரகம் உண் டென்று கூறுவர். இதன் வழி பார்க்கையில் செல்வி கோபிகா சிறீதரனுக்கும் ஆண்டவனின் அனுக்கிரகம் கிடைத்துள்ளது என்றே கூறவேண்டும். இவர் பாங்குறொப்ற் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார். இளம் பொறியியலாளர் சங்கத்திலும் இவர் அங்கத்துவராக உள்ளார். இவர் தன் நண்பியுடன் சேர்ந்து **Cloud Burst** என்கின்ற கருவி ஒன்றைக் கண்டுபிடித்து தேசிய அளவில் பரிசில் பெற்றுள்ளார். இக் கருவி வெளியில் காயப்போட்டிருக்கும் உடுப்பில் மழைபடும்போதும் உடுப்பு முழுதாகக் காய்ந்த பின்பும் அலாரம் அடித்து உங்களை உஷார்ப்படுத்தும். இவர் மேன்மேலும் கண்டுபிடிக்க கலசம் வாழ்த்துகின்றது.

எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எமக்குத் தெரியாமல் இறைவன் வீற்றிருக்கின்றான். நாம் கருவாக இருக்கும்பொழுதே உறைவிடம் பிடித்துக் கொண்டான். நாம் குழந்தையாக பிறந்ததுமுதல் எவ்வளவு சந்தோஷமாக எங்கள் முகங்களில் இறைவன் பிரகாசிக்கின்றான். பொய், சூதுவாது தெரியாமல் அன்பும் அருளும் நிறைய வாழ்வு தொடங்குகின்றது. பின் பெற்றோர் உற்றார் அயலவர் இணக்கம் வந்தவுடன் இறைத் தன்மை மறையத் தொடங்குகின்றது. அதன் பின் உலக இன்பத்தில் மூழ்கி இறைவனை மறந்துவிடுகின்றோம்.இறைவன் அருளைப் பெறுவது எங்ஙனம்?

# இறைவன் நம்மைக் கைவிடமாட்டான்

பல வழிகள் உண்டு. ஞானயோகம் , கருமயோகம், தியானயோகம், பக்தியோகம் முதலிய வழிகளால் இறைவனை நமது உள்ளத்தில் கண்டுகொள்ளலாம்.

ஞானம்

பயனில்லாச் சொல் பேசாமை, கபடம், கோபம், மோசம் செய்யாமலிருத்தல் ஞானம். மற்றொருவனுக்கு இது செய்ய வேண்டும் இதுசெய்யாமல் ஒழியவேண்டும் என்று எதிர்பாராதிருத்தல் ஞானம். சுகம் துக்கம் இரண்டையும் ஒரே சமநிலையில் ஏற்றுக்கொள்வது ஞானம்.

## தியானம்

தியானம் என்பது புறச்சடங்குகளை நீக்கிவிட்டு உலக ஆசைகளைத் துறந்து, நம் உள் இருக்கும்
இறைவனைக் காணமுயல்வதாகும்.

**எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்**
**கண்ணார் அமுதனைக் கண்டு அறிவார் இல்லை**
**உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கில்**
**கண்ணாடி போலக் கலந்திருந்தானே– திருமூலர்.**

உறவுகோல ஊன்றி உணர்வு கயிற்றினால்
முறுகவாங்கி கடையமுன்னிற்குமே

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை உணவு இல்லை, தான் இல்லை
தேட்டமும் இல்லை சிவன் அவன் ஆமே– வள்ளல்பெருமான்

## கர்மயோகம்

கர்மயோகமே கடவுளை அடையும் வழியெனக் கீதை கூறும்.
கர்மயோகம் என்பது உண்பது உறங்குவது இனத்தை
பெருக்குவது ஆணவமாக உலாவுவது அல்ல.
கர்மம் செய்யாமல் இருத்தல் முடியாது. ஆனால் செய்யும் எக்கருமத்தையும் முழுமனதுடனும் திறனுடனும் செய்ய வேண்டும். பலன் கருதிச் செய்யலாகாது. எத் தொழிலிலோ எக் கருமத்திலோ வேலை செய்ய உனக்கு ஊழ்நிலை, சூழ்நிலை,

வகுத்திருக்கிறதோ அத்தொழிலை இறைவனுக்கு செய்யும் பூசை எனக் கருதி கருமம் செய்தல் வேண்டும்.

புரியும் செயல் யாவும் பூசனையாய் புரியும்படி செய் பரிபூரணனே.

## பக்தியோகம்

பக்தி நான்கு வகை என்பர்.

1. தன் வாழ்க்கைத் துன்பங்களை போக்க இறைவனிடம் பக்தி செலுத்துதல்

2. தனக்கு ஏராளமான செல் வங்கள் வேண்டுமெனப் பிரார்த் தித்தல்

3. ஞானத்தின் உண்மை நிலையைக் கொடுக்கும்படி வேண்டுதல்

4. இறைவனை அடைய எல்லா உயிர்களுக்கும் பணி செய்து இறை இன்பத்தை அனுபவிக்க பக்தி செய்தல்



கருணையே வடிவாய் பிறர்களுக்கு அடுத்த **கடுந் துயர் அச்சமாதிகளைத்**
**தருண நின் அருளால்**
**தனிர்த்து அவர்க்குஇன்பம்**
**தாவும் வன்புலைகொலை**
**இரண்டும்**
**ஒருவிய நெறியில்**
**உலகெலாம் நடக்க**
**உஞற்றவும் அம்பலத்தனிலே**
**மருவிய புகழை வழுத்தவும்**
**நின்னை**
**வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்–**
திருவருட்பிரகாச வள்ளல்

மக்கள் புலால் உண்பதாலும் அதற்காக உயிர்களைக் கொல்வ தாலும் மக்கள் துன்பத்தில் சிக்குகிறார்கள். அந்த அவல நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்ற எனக்கு உதவவேண்டும். உலகம் முழுவதும் இறைவன் ஆலயமே என்பதை எல்லா உயிர்களும் புரிந்துகொள்ளும்படி அத்திருப்பணியில் என்னை ஈடுபடுத்தவேண்டுமென கேட்கிறார் வள்ளலார்.

பக்தியோகம் இலகுவானது. அதில் மனதை நிறுத்துவது மிகவும் சுலபம். தமது இஷ்ட தெய்வத்தை இரவும் பகலும் இடைவிடாது பூசிப்பது பக்தி செய்வதென்றால் என்ன? இறைவனை எங்கும் காண்பது எவ்வண்ணம் இது முடியும்? எல்லா உயிர்களிடத்தும் அன்புடன் இருப்பது இது எப்படி? இன்பதுன்பங்களைச் சமசமாகப் பாவிப்பது எப்படி? இருப்பதைக் கொண்டு திருப்தி அடைவது எவ்வாறு? பிறர் நம்மை புகழ்ந்து பேசினாலும் இகழ்ந்து பேசினாலும் சஞ்சலம் இல்லாமல் இருப்பது எங்ஙனம்? இன்பத்திலும் துன்பத்திலும் தொழிலும் ஆட்டத்திலும் இடைவிடாது நெஞ்சம் இறைவனை சிந்தித்தல் எப்படிச் சாத்தியமாகும்? என்பன போன்ற கேள்விகள் எம்மையறியாமலேயே எம்முள்ளத்தில் எழுகின்றன.

நோய் வந்தால் அதைத்தீர்க்கும் படி இறைவனை வேண்டவேண்டும். செல்வம், கல்வி, அறிவு ஆயுள் முதலிய எல்லாவற்றையும் இறைவனிடம் கேட்கவேண்டும். இறைவனிடம் முழுநம்பிக் கையுடனும் பக்தி பூர்வமாகவும் கேட்டால் அவர் கொடுப்பார். கேட்டவுடன் கொடுப்பது இறைவன் வழக்கம் இல்லை. நமது பக்தி பக்குவம் பெற்றபின் தான் நாம் கேட்ட வரங்களை இறைவன் அருள்வான்.



ஆற்று வெள்ளத்தில் வீழ்ந்தவன் வேரையோ புல்லையோ பிடித்துக் கொண்டு தள்ளாடினால் கரைசேர மாட்டான். இரு கைகளையும் தூக்கிக் கொண்டிருந்தால் ஆற்று வெள்ளம் அவனை கரைசேர்க்கும். இறைவன் மேல் முழுநம்பிக்கை கொண்டு எல்லாம் உன் செயல் என் செயல்பணி செய்துகிடப் பதேயென அமைதியாகத் தொழிலை செய்துகொண்டுபோனால் இறைவன் அருள்கிட்டும். இதற்கு ஒரு சான்றாக, துச்சாதனன் பாண்டவர்கள் முன்னால், துரியோ தனன் சபையில் திரௌபதி தன்

புடவையை அழுத்திப் பிடித்திருந்த கைகளை எடுத்து விட்டு இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி வணங்கி கண்ணா நீதான் துணை கண்ணா அபயம் என அழுதவுடன் கண்ணன் அருள் புரிந்தமையைக் கூறலாம்.

இறைவன் அருள் செய்த பக்தர்கள் பலர் உள்ளனர்.

1. பிரகலாதனுக்கு தூணில் இறைவன் தோன்றியமை.

2. மார்க்கண்டேயருக்கு சிவன் அருள் செய்தமை.

3.பக்தமீராவுக்கு ஆணிப்படுக் கையை ரோஜாமலர்ப் படுக்கையாக மாற்றியமை.

4.பக்தநாமதேவர் கொடுத்த அன்னத்தை விக்கிரகத்திலிருந்து வெளிப்பட்டு அன்னத்தை உண் டமை.

5.திருநாவுக்கரசரை சமணரிட மிருந்து காப்பாற்றியமை

**சொற்றுணை வேதியன்**
**சோதிவானவன்**
**பொற்றுணை திருந்தடி**
**பொருந்தகைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர்**
**கடலிற்பாய்ச்சினும்**
**நற்றுணையாவது நமச்சிவாயவே.**

திருநாவுக்கரசர் நமச்சிவாய மந்திரத்தை பக்தியுடன் ஓதிக்கொண்டே இருக்க கருங்கல் கடலில் தெப்பமாக மிதந்தது. திருநாவுக்கரசரைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தது.

இறைவன் நமது பக்தியை சோதிக்கின்றான். அந்தச் சோதனையில் நாம் உறுதியுடனிருக்கவேண்டும். அப்போதான் இறைவன் எம்முள் வியாபித்து அருள் புரிவான்.

## கலசத்தின் 25 ஆவது மலர்

கலசம் தனது 25ஆவது மலரை தை மாதம் வெளியிட உள்ளது. இம் மலர் அதிக பக்கங்களுடன் நிறைந்த விடயங்களைத் தாங்கி வெளி வரவுள்ளது. குறிக்கப்பட்ட ளவு பிரதிகளே அச்சி டப்படவுள்ளதால் உங்கள் பிரதிகளை முன்கூட்டியே பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர்–



CAR, MINI-BUS, VAN RENTAL



COMPETITIVE PRICES-NO HIDDEN EXTRAS
UNLIMITED MILEAGE 3 DAYS & OVER
SPECIAL WEEKEND RATES
AUTOMATICS, ESTATES & EXECUTIVES
ALSO AVAILABLE

EUROPEAN HIRE ENQUIRES WELCOME

SUNDRIVE LTD T/A DIMPLE SELF DRIVE




TEL: 0181 205 1200

16 VARLEY PARADE EDGWARE ROAD COLINDALE LONDON NW9 6RR FAX: 0181 200 7426

TEL: 0171 243 4400

Car Park, Poplar Place, Bayswater, London W2 4AS Fax : 0171 243 4408

# எழுதினவன் ஏட்டைக் கெடுத்தானா?

எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான் பாடினவன் பாட்டைக்கெடுத்தான் என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழிக்குப் பலர் பல்வேறு விளக்கங்கள் கொடுப்பது உண்டு. சீராக எழுத்தாணி பிடிக்கத் தெரியாதவன் அந்த நாளில் கடுதாசியாகப் பயன்படுத்தப்பட்ட ஓலையைக் குத்திக் கிழித்து விடுவான் என்றும், பாடத்தெரியாதவன் அதாவது பாட்டுக்கேற்ற பண்ணை அமைத்துப் பாடத் தெரியாதவன் பாட்டின் பொருளையே கெடுத்துவிடுவான் என்றும் நமது வாத்திமார்கள் நமக்கு சொல்லித் தந்திருக்கின்றார்கள். வாத்தியார் சொல்லித்தந்தது சரிதானா என்று நாம் கேட்கவில்லை, கேட்டதுமில்லை அப்படிக் கேட்பதை அனுமதித்த காலமும் அல்ல நாம் படித்த காலம். சில நாட்களுக்கு முன்னர் தமிழார்வம் நிறைந்த இலக்கிய நண்பர் சிலருடன் பலதும் பத்தும் பேசிக் கொண்டிருந்தபோது எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்ற சொற்றொடரின் மெய்ப்பொருள் என்ன என்ற சர்ச்சை எழுந்தது கூடியிருந்த கலை இலக்கிய நண்பர்கள் தத்தமது சிந்தனைக்கு வந்த கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு உதாரணம் கூறமுடியுமா என்ற வினா எழுந்தபோது அதற்கு விடைதா மற்றவர்கள் முன்வரவில்லை என்னைக் கேட்டார்கள் . எனது மனத்தைப் பல நாட்களாகக் குடைந்து கொண்டிருந்த கருத்தை அந்தக் கூட்டத்தில் கூறினேன். அந்தக் கருத்தையும் விளக்கத்தையும் கலசத்தின் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள நினைந்து இதனை எழுதுகின்றேன்.

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்பதிலிருந்து தொடங்குவோம். எழுதினவன் ஏடு என்ற சொற்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சொற்கள். கணனி உலகத்தில் வாழ்கின்ற சிறுவர்களுக்கும் கணனி உலகத்தோடு ஒத்தோட முயன்று பழமையை மறந்துபோன பெரியவர்களுக்கும் எழுதினவன், ஏட்டை என்ற சொற்கள் கூட மறந்து போன சொற்களாக இருக்கக்கூடும். எழுதினவன், ஏடு என்ற சொற்களின் பொருளையும் முக்கியத்துவத்தையும் உணரவேண்டும் என்றால் டாக்டர் உ.வே சாமிநாதையரின் வரலாற்றைப் படிக்க வேண்டும். இன்று சங்க இலக்கியம் என்று நாம் பேசிக்கொள்கின்ற இலக்கியங்களை அவர் எப்படி ஊர்ஊராய் சென்று படாதபாடுபட்டுச் சேகரித்தார் என்ற வரலாற்றைத் தெரியவேண்டும். சிலப்பதிகாரம் என்று இன்று நாம் அறிந்திருக்கும் தனித்தமிழ்க்காப்பியம் சில காலமாகச் சிறப்பதிகாரம் என்று அறியப்பட்டு வந்ததாக அவரே குறிப்பிடுகின்றார். எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான் என்ற செய்தியையே அந்த வரலாற்றில் அவர் குறிப்பிடுகின்றார்.

இன்றோ, படி எடுக்கப் பல வசதிகள் உள்ளன. படியெடு கருவிகள், தட்டச்சு, கணனி என்று பற்பலவசதிகள் உள்ளன. எழுத்தாணி பிடிக்க வல்லவனே அந்த நாளில் அச்சீட்டாளனாக இருந்தான். பண்டிதருக்கோ எழுத்தாணி பிடிக்கத் தெரியாது. தெரிந்தாலும் போழ்தில்லை. பிரதி பண்ணுவோனுக்கு எழுத்தாணி பிடிக்கத் தெரியம். பொழுதும் இருந்தது. ஆனால் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற வாக்கியத்தின் பொருள் புரியாதவர்கள் அவர்கள். அதாவது எழுத்தறிவிக்கப்படாதவர்கள். புலி என்றால் புளி என்றும் அரி என்றால் அறி என்றும் அறிந்துகொள் என்றால் அரிந்து கொல் என்றும் எழுதுவதால் ஏற்படும் விபரீதவிளைவுகளைப் புரிந்துகொள்ளமாட்டாத நீட்டோலை வாசிக்கமாட்டாத நல்மரங்கள்! அப்படிப்பட்ட ஓர் எழுத்தாணி ஆள்வானிடம் திருக்குறளின் ஓர் அதிகாரம் அகப்பட்டிருக்கவேண்டும் என்றது எனது எண்ணம். அந்த எண்ணத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள நினைக்கின்றேன்.

தினற்பொருட்டால் கொல்லாது உலகு எனில் யாரும்
விலைப்பொருட்டால்
ஊன் தருவார் இல்

என்பது நமக்கெல்லாம் மனப்பாடம் ஆன குறள். அதன் பொருளும் நமக்குப் புரியும். தின்பதற்காக உலகத்தவர்கள் கொலை செய்ய மாட்டார்கள் என்றால் விற்பனை செய்யவென்று இறைச்சியையோ மீனையோ எவரும் கொண்டு வந்து தரமாட்டார்கள். என்று நாம் படித்திருக்கிறோம். ஆனால் மேற்படி குறளுக்கு நாங்கள் கொள்கின்ற கருத்துச்சரியா என்பது தான் கேள்வி.

விற்பனை என்று வரும்போது ஒருவன் விற்பான் மற்றவன் வாங்குவான் அதாவது ஒருவன் கொடுப்பான்

மற்றவன் கொள்வான். இறைச்சி விற்பனை என்று வைத்துக்கொண்டால் விற்பனை செய்தவன் தான் உயிர்க்கொலை செய்து ஊனை விற்பனைக்கென்று கடைக்கோ வீட்டுக்கோ கொண்டு வருகின்றான். வாங்குவோன் பணத்தைக் கொடுத்து ஊனை வாங்குகின்றான். அதாவது வாங்குவோன் கொல்வதில்லை. விற்பவன் தான் கொலை செய்கின்றான். அதாவது விலைப்பொருட்டால் ஊன் தருபவன் தான் உயிர்க்கொலை செய்கின்றான். அதாவது தின்னும் பொருட்டு வாங்குபவன் கொல்வதில்லை.

இப்போது குறளை மீண்டும் பாருங்கள்.
தினற்பொருட்டால் கொல்லாது உலகெனில் என்று இருக்கின்றது. அது சரியா? தின்னற் பொருட்டு

ஒருவன் கொன்றால் அவன் வெறு ஆளிடம் இருந்து வாங்கவேண்டிய அவசியம் இல்லையே வள்ளுவர் விடுவாரா பிழை?

கொள்ளுதல் என்றால் வாங்குதல் என்று பொருள். கொள்முதல் என்ற ஆட்சி காண்க. ஆகவே இந்தக் குறளில் வருகின்ற கொல்லாது உலகெனில் என்பது கொள்ளாது உலகெனில் என்றிருக்கவேண்டும். ஆனால் பிரதிபண்ணிய எழுத்தாணிக்காரன் கொல்லாது என்று எழுதிவிட்டான். தட்டிக்கேட்க மனமில்லாத தமிழர் தொடர்ந்தும் அந்தக் குறளை அப்படியே எழுதியும் படித்தும் வருகின்றோம். எழுதினவன் விட்டவழுவால் திருக்குறள் என்ற தமிழ் ஏடு அதாவது தமிழ் நூல் கெடுக்கப்பட்டுவிட்டதா? சிந்திக்கலாமா?

**செ. சிறீக்கந்தராசா**


# SATHY ESTATES LTD
# SATHY PROPERTY SERVICES
## Residential Lettings

LANDLORDS & TENANTS WELCOME

LANDLORDS

YOUR RENT IS GUARANTEED * QUARTERLY RENT PAYABLE IN ADVANCE

TENANTS

ACCOMMODATION ARRANGED TO SUIT YOUR COMFORTS

AREAS

LONDON BOROUGHS OF BRENT * HARROW * EALING * BARNET

SATHY PROPERTY SERVICES LTD
29 Wembley Hill Road, Wembley, HA9 8AS
Tel: 0181 902 2221
Fax: 0181 903 8560

SATHY ESTATES LTD
177 HIGH ROAD, WILLESDON
NW10 2SD
Tel: 0181 830 2585
Fax: 0181 830 3100

KUMARANS

# குமரன்ஸ்

உங்களுக்குஅன்றாடம்
தேவையான லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு
தொகையாக வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

# KUMARANS

# நெஞ்சே நீ நினையாய்



மயிரங்கூடலுக்கு அப்புத்துரை

அறஞ் செய விரும்பு என்று தமிழ்க்கிழவி ஒளவையார் பேசுகின்றார். விரும்புதல் மனத்தின் செயல் செய்தல் காயத்தின் செயல். கூர்ந்த அறிவுடைய கிழவி அறத்தைச்செய் என்று சொல்லாது அறத்தைச் செய்வதற்கு விரும்பு என்று சொன்னாளென்றால் அங்கு ஏதோ எள்ளார்ந்த பொருள் ஒன்று இருக்க வேண்டும் என்று எண்ண இடமுண்டு. ஒன்றைச் செய்வதிலும் நினைத்தல் இலகுவானது. எல்லோராலும் இலகுவாகச் செய்யப்படக்கூடிய செயலுக்குப் பொருள் பொழுது முயற்சி என்பன உபகாரமாதல் வேண்டும் அதனாற் செயல் சிந்திப்பதை விடக் கடினமானது. என்னும் கருத்து நிலவுகின்றது. நினைத்தலோ விரும்புதலோ உலகியலில் எதிர்ப்பிற்கிடமானவையன்று. விரும்பினால் விரும்பலாம் அல்லது விட்டுவிடலாம். நினைவும் அவ்வண்ணமே. அதனாற் போராட்டத்திற்கு இடமில்லாது போய்விடுகின்றது. அறத்தைச் செய் என்று சொன்னால் சொல்பவர் யார் ? அவர் தகுதி என்ன? சொல்வதற்கு அதிகாரமுடையவரா? செய்வதற்குரியவர்களது நிலைமை சிந்திக்கப்பட்டதா என்பனவாய பல வினாக்கள் எழுவதற்கு இடமுண்டாகும். இவ்வாறெழும் முரண்பாடான கருத்து வேறுபாடுகளிலிருந்து விடுபடுவதை நோக்கமாகக் கொண்டு கிழவி இந்த உபாயத்தைக் கையாண்டிருக்கிலாம் என்பது என் சிந்தனை.

மற்றொருவகைச் சிந்தனைக்கும் இடமுண்டு. அறமென்றால் என்ன எனபதனை அறிவதுமூலம் அது தெளிவாக்கப்படும். அறத்திற்கான முக்கியத்துவம் நினைவிலா செயலிலா என்பது தீர்மானிக்கப்படவேண்டும். இரண்டுமே முக்கியத்துவம் வாய்ந்தவை எனினும் மனதை இடமாகக் கொண்ட நினைவு முதலிடம் பெறுமா அல்லது காயத்தை இடமாகக் கொண்ட செயல் முதலிடம் பெறுமா என்று கண்டறியவேண்டும் என்பது மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் என்று அறுதியிட்டுக் கூறுவர் வள்ளுவர். மாசு அழுக்குகளை நீத்துப் புனிதமாக இருக்குமானால் அந்த நேரம் சிந்தித்துக் செயல்ப்படுத்துவது அறமாக முடியாலாமென்பதும் அதனாலேதான நினைவு நல்லது வேண்டும் என்று பாடினார். பிறரும் அவ்வண்ணமாய உள்ளங்களையே இறைவன் இடமாகக் கொள்வான்.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

என்னும் வள்ளுவர் குறளுக்குப் பொருள் கண்ட பரிமேலழகர் அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவொடு விரைந்து நேரலின் ஏகினானென இறந்த காலத்தாற் கூறினார் என்று சொல்வர். இத்தகு செய்திகள் எமக்கு ஒரு உண்மையைத் தெளிய வைக்கின்றன. நினைவு செயலோடு ஒக்குமென்பது தான். அது உள்ளத்தால் நினைந்தால் உண்மையாக நினைந்தால் அது செயலாகும் என்பது உறுதி உந்தவிதப் பக்கத் தாக்கமுமின்றித் தெளிந்த உள்ளத்து நிகழும் நிகழ்வு சிறப்புடையதாகவே அமையும். பூசலார் நாயனாருடைய மன முயற்சியை இங்கு நாம் கருத்திற் கொண்டு இன்பமடைய இடமுண்டு. உலகியலுக்குப் பொருத்தமாகக் கோயில் அமைக்க முடியாது. போனமையினால்

மனத்திலேயே பெரியதொரு கோயிலைக் கட்டி முடித்தவர் அவர். முன்னுரிமையோடு இறைவன் அந்தக் கோயிலில் அமர்ந்தமை நாமெல்லாம் அறிந்தது. எனவே உள்ளத்தான் ஒருவன் நினைக்கும் நினைவு அதாவது புனித உணர்வோடு ஒன்றிய நினைவு செய்த செயலுக்கு ஒப்பானது என்று அறிய முடிகின்றது. மனம், வாக்கு, காயம் என்பவற்றுள் மனம் முதலிடம் பெற்றமைக்கான காரணம் என்ன என்பதை இப்போது நாம் உணரமுடிகின்றதல்லவா? இந்த நிலைமை புலப்படும் வகையிலேதான் எங்கள் திருமுறைச் செல்வர்கள் அரும்பாடல் தந்த அடியார்கள் நெஞ்சை விழித்துப் பாடியுள்ளார்கள்.

**நன்னெஞ்சே உனையிரந்தேன் எம்பெருமான் திருவடியே**
**உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்**
**அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை எப்போதும்**
**பன்னுஞ்சீர் வாயதுவே பார்கண்னே பரிந்திடவே**

என்று சம்பந்தப்பெருமான் நெஞ்சை உருக்குகின்ற நிலைமையைப் பார்க்கின்றோம். உய்தி வேண்டுமெனில் எம்பெருமான் திருவடியை நினை என்று சொல்லிய அவர் அவ்வண்ணம் நினைக்கின்றவர் வாய்தான் பிரமபுரத்தாரமுதை எப்போதுஞ் சொல்லும், அவர் திறப்புக்களை எப்போதும் பேசும் என்கின்றார்கள். நெஞ்சார நீடு நினைவாரை மூடு வினைதேய நின்ற நிமலன் ஆய காரணத்தால் நீள நினைந்து நித்தலுந் தொழவேண்டி மனிதப் பிறவியை வேண்டுகின்ற நிலைமைக்குள்ளாகின்றோம்.

**தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்**
**கொந்நாவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்**
**எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால் ஏழை நெஞ்சே**
**அந்தணாரூர் தொழுது உய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்கே**

பரிதாபத்திற்குரிய நெஞ்சமே உனக்கு வாழவேண்டுமென்பதொரு எண்ணமுண்டென்பதை யானறிவேன் எப்படி வாழப்போகின்றோம். எப்போ வாழப் போகின்றாய் அப்பா போய்விட்டார் அம்மாவும் போய்விட்டார் அடுத்து போகவேண்டியவர் யார் நாம் தானே கூற்றுவன் காலம் பார்க்கின்றான். ஆரூரனைத் தொழுது உய்திய டையலாம் என்று அனுதாபத்தோடு சொல்லுகின்றார் சம்பந்தர்.

இவ்வண்ணம் பரிவு காட்டியவர் நீ என்னப்பா புண்ணியஞ் செய்தாய் நீண்டகாலம் நீ என்னோதானே வாழ்கின்றாய் இந்தப் பிறவியில் நல்ல புண்ணியம் ஏதாவது நீ செய்ததாகத் தெரியவில்லை. முந்திய பிறவியிலேதான் ஏதோ நல்லது செய்துவிட்டாய் இல்லையேல் உயர்ந்த இந்த இன்பானுபவ வாழ்க்கை உனக்குக் கிடைத்திருக்க முடியாதே என்று மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மிதக்கின்றார்கள்.

**என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கூல் வைத்து**
**முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை**
**முன்பு நீ செய்த நல்ல முயற்சிகளுள் என்ன புண்ணியமப்பா செய்தாய்** என்று அறிய அங்கலாய்க்கின்றார்

**முழுமணி தாளங்கள்**
**மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்**
**பன்னி ஆதரிச் தேத்தியம் பாடியும்**
**வழிபடு மதனாலே**

நெஞ்கே நீ செய்ய வெண்டியதைச் செய்திருக்கிறாய். வலஞ்சுழி வாணனை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்பைப் பொருத்தமாகப் பயன் கொண்டிருக்கிறாய். இது எல்லோருக்கும் கிடைக்க முடியாதது. இன்றோ நேற்றோ செய்த புண்ணியத்தால் ஏற்பட்டதாக இந்த வாய்ப்பைக் கருதமுடியாது. முன்னைய பிறவிகளில் நீ செய்த புண்ணியந்தான் காரணமாக வேண்டும். வலஞ்சுழி வாணனை வழிபடக்கிடைத்த வாய்ப்பும் அதனாலேதான் கிடைத்தது.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே
வல்வினைப்பட்டு ஆழாது
நீநாளும் கன்னெஞ்சே நினை
கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டும் பெருமாற்கே
பூநாளும் கலைசுமப்ப புகழ்காமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

வாழ்நாள் சாகாலே எமக்குத் தெரியாதது ஆகவே சாய்க்காட்டேம் பெருமானை. நெஞ்சே, நீ என்றும் நினை என்கின்றார்கள்.

**நல்லார் நெஞ்சில்**
**நில்லான் ஈசன்**
**கொல்லா தாரொடு**
**முன்னோம் யாமே**

கற்றவல் நெஞ்சத் தடத்துத்தான் இறைவன் உறைவான் கற்கவேண்டியவை எவை என்றே கேள்வி எழும். இறைவனிடம் கேட்டுச் செவ்வனவெல்லாம் கற்கப்படவேண்டியவையே .இறைவன் திருப்புகழைப் பாடுவோம். இறைவன் குணாதிசயங்களைப் பேசுவோர்

இறைவன் பெருங்கருணைத் திறத்தைச் சிந்திப்போர் கற்க வேண்டிய கற்க வேண்டியவற்றைக் கற்றவர்களாவர். இவர்கள் கற்கப்பட வேண்டியவர்களுக்குத்தான் இவ்வகை கல்வியைப் பெறாதவர்கள் நெஞ்சத்து இறைவன் நிற்கமாட்டான். அவன் திருநாமத்தைச் சொல்லாதவர்களுக்கு யாம் சுற்றமும் ஆக மாட்டோம் ஆகவே

நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன சடை நிர்மலனை

என்று அப்பர் பெருமான் எம்மை வழிப்படுத்துகின்றார்.



அறத்தின் வழியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பிறரையும் அறவழியில் ஈடுபடுத்தி இரு பாலாரையும் அறந்தவறாது காப்பாற்றிச் சொல்லாலும் செய லாலும் வாழ்ந்து காட்டி ஆற்றுப்படுத்தும் தலைவி, துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி , வாழ்வா சாவர என்று வாழ்ந்து கொண்டு மக்கள்சேவை புரிந்துவரும் சிவத்தமிழ்ச்செல்விக்கு காலங்கடந்தென்றாலும் டாக்டர் பட்டம் கிடைத்தமையை நினைக்கும்போது மனம் புளகாங்கிதம் அடைகின்றது. செவ்வாய், வெள்ளி மற்றும் திருவிழா காலங்களில் கோயிலுக்கு வரும் வியாபாரிகளை அன்போடு கவனிக்கும் பாங்கை எப்படிக் கூறுவது? உலகிலே மானிடசேவைதான் மிகச்சிறந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் அன்னைக்கு ஆண்டவன் அருள்பாலிக்கவேண்டு ஆண்டவனை வேண்டி அன்னையின் அருள்வேண்டிக் கலசம் தலைதாழ்த்தி நிற்கின்றது.


# MARKANDAN & CO

## SOLICITORS

***Empowered to Administer Oaths***

THAMES HOUSE
[illegible] ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters to appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

# சிறுவர் கலசம்

# CHILDREN'S KALASAM

இந்தப் பகுதி வருங்காலத்தலை முறையினரை நெறிப்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சிந்தனைக்கு உகந்ததான கட்டுரைகளை பிரசுரிக்க எண்ணியுள்ளோம். ஆதலால் இப்பகுதி சம்பந்தமான அபிப்பிராயங்களை எங்களுக்கு அனுப்பி வைத்தால் தொடர்ந்து இப்பகுதியினை முன்னெடுத்துச் செல்ல உதவியாகவிருக்கும்.

**We welcome views and suggestions from children and parents.**

## பழக்கத்தின் தோஸம்

ஒரு கடற்கரை ஓரமாகச் செம்படவர்களின் குப்பம் ஒன்று இருந்தது. இங்குள்ள மீனவர்களின் கடலில் சென்று மீன் பிடித்து வருவார்கள். மீனவப் பெண்மணிகள் தங்கள் கணவன்மார் கொண்டுவந்த மீன்களை எடுத்துச் சென்று சந்தையில் விற்று வருவார்கள்.

ஒரு நாள் சில பெண்கள் மீன்களைச் சந்தையில் விற்றுவிட்டு வரும்போது கடுமையான மழை பிடித்துக் கொண்டது. இந்த மழையில் அவர்கள் வெகுதூரத்திலிருக்கும் தங்கள் இருப்பிடத்திற்குச் செல்ல முடியாது . மழைக்கு ஒதுங்குவதற்காக அருகில் ஏதாவது இடம் இருக்கிறதா என்று பார்த்தார்கள். அருகில் ஒரு குடிசை தென்பட்டது.



மீனவப் பெண்மணிகள் அந்தக் குடிசைக்குச் சென்றார்கள். அந்தக் குடிசையில் ஒரு பூக்காரி இருந்தாள். இவள் நந்தவனத்திலிருந்து பூக்களைப் பறித்து வந்து மாலையாகக் கட்டி விற்பது வழக்கம். இவள் வீடு முழுவதும் மலர்களின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

மீனவப பெண் கள் அந்த குடிசையிலிருந்த பூக்காரியிடம் அம்மா நாங்கள் மீன் விற்க சந்தைக்கு வந்தோம் . திடீரென்று மழை பிடித்துக் கொண்டதால் வீட்டுக்குப் பொக முடியவில்லை. இன்று இரவு இங்கே தங்கிச் செல்ல அனுமதிக்க வேண்டும். என்றனர்.

பூக்காரியும் மனமிரங்கி அவர்களுடைய கூடைகளை வாங்கி ஒருபுறம் வைத்துவிட்டு அவர்களுக்கு வேறு ஆடைகள் கொடுத்து உடுத்திக்கொள்ளச் செல்லி அவர்களை அங்கு படுத்துக்கொள்ளச் சொன்னாள்.

மீனவப் பெண்களுக்கு வெகு நேரமாகத் தூக்கம் வரவில் லை. வழக்கமான மீன் வாசனை தங்களுடன் இல்லாததால் அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை என்று தெரிந்து கொண்டார்கள். பின்னர் எழுந்து வந்து பூக்காரியிடம் இங்குள்ள பூக்களின் மணம் எங்கள் தூக்கத்தைக் கெடுக்கிறது. எங்களுடைய மீன்கூடைகளை எங்களிடம் கொடுத்துவிடு என்று கூறிய மீனவப் பெண்கள் மீன்வாசனையுடன் கூடிய தங்கள் ஆடைகளை வாங்கிக்கட்டிக்கொண்டதுடன் மீன் கூடைகளின் மேல் சிறிது தண்ணீர் தெளித்துத் தங்கள் மூக்கின் அருகில் வைத்துக்கொண்டு உறங்கத்தொடங்கினார்கள்.

சிறுது நேரத்திற்கெல்லாம் அந்த மீனவப் பெண்மணிகள் நன்கு குறட் டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

# KANTHA SASHTHI(SASHDI)

This is a special celebration in honur of Kantha swami. Lord Subramanya killed Suran and Blessed him and others on this day.
To save the Devas from sorrow , Subramanya fought with Suran from six days and on the 6th day cut him in to two halves with his weapon the VEL. Then He blessed Suran and one half became his flag the cockrel. The Devas who had suffered under Suran's rule worshiped the Lord during the six days and became happy, thus we have fasting during the sis days , singing His praise and hearing His stories . Those who cannot fast during the six days , eat one meal a day and fast on the 6th day to earn Murugan's blessing.

Aarumuga thought of saving His vevotees from hardship, thus He used his Jana Sakthis , i.e. the sprit of knowledge (the Vel) . The Vel destroyed Suran and all his people and saved the Devas. When we think over this story carefully , the meaning of the story becomes clear i.e. that Jeevas are delivered from Maya and blessed with true knowledge. The six days of celebration represent the six faced Murugan. Six days of fasting to destroy the six evils of Kama, Krodha, Loba, Moha, Maeda matsyara. On the 6th day devotees break their fast and are happy. Special days for worship of Subramanyan are:- during the star of Karthika, Sasdhi Thithi andTtuesdays The 8th month Karthikai gets Subramanya's blessing.
Sages like Narada, Emperor Musuguntha, Nakirar, Arunagiri are some of the great people who were Muruga devotees and obtained His blessing.

Our actions make us bad or good through the two powers, the bad and the good people through the two powers., the bad and the good . Even the Devas suffer for their bad deeds; then Muruga saves them. He is the embodiment of Jana. he holds the Jana Sakthi(Vel) in his hand. It makes the heart of the devotees bloom like the lotus with knowledge.

Suran obtained great gifts from God by great Tapes. Then he became proud of his great powers, ill treated the Devas and Good people. If he had



persisted in doing evil deeds for a long time, he would enter into everlasting hell. However because he had done great tapes, the lord wished to save him from everlasting sorrow. Thus when the devas asked Him, the lord appeared as Lord Kumara and destroyed the evil man with his vel but showed His compassion and mercy by taking him unto himself as the peacock and cock.

Suran represents the Jeeva full of pride and ego who does not worship the Lord. The Jeeva can realise the Lord only when there is no more pride and ego is destroyed. In the process the Jeeva must suffer sickness, old age and death. Only praters to God can save the Jeeva from pride and ego. Then God in His mercy destroys pride and ego and takes the devotees unto Himself. the Lord did not Kill Suran but saved him in His compassion and mercy. This is the inner significance of the fight between Muruga and Suran(Suran Pour)

இச் சிறுவர் பகுதிக்கான செலவின் ஒரு பகுதியினை 3 நிறுவனத்தினர் மனமுவந்து உதவி செய்துள்ளனர்.

**UMA CONVENIENT STORE**
**Mr. A.K.Kumaravel And**
**Vasan Printers**



# A: SPEAKING CAVE:

There was a forest. A lion lived in that forest. Once the lion went very far in search of his prey.

He was very hungry but he did not find anything to eat. He was tired but he continued to make efforts. He moved towards the hill nearby.

The sun was about to set when he saw a cave. The lion thought, 'let me stay in this cave for the night. Possible, the creature living in this cave will return at night. L'll kill it to satisfy my hunger.

The lion entered the cave and waited for the creature to arrive. He hopes came true. The fox living in this cave returned to its abode at night. The lion heared the footsteps and was delighted.

But the fox was very clever. It had formed the habit to behave cautiously. Before entering the cave the fox would make sure that no other creature had entered into it.

The fox saw the footprints leading into the cave. But there were no marks of footprints coming out of the cave. It was a sure sign that some creature had entered into the cave but it did not go out. The fox thought. "surely, somebody is in. I must know who it is. Probably it must have hidden inside to attach and kill me.

The fox examined the footprints and found that they were of a lion. To confirm its belief the fox shouted from outside the cave "O cave, why do you break your promise that you must say 'welcome' when I return? You used to say it everyday. Why are you silent today? I shall not enter unless I hear 'welcome' form you.

The lion was expecting the fox to enter the cave with a hope to kill it and have a feast but the fox was talking differently. The lion thought, " It must surely be the routine for the cave to say, 'welcome'. But today, as I am inside it, the cave is silent out of fear. If the cave does not say 'welcome' the fox will not enter it and I'll have to remain hungry.




Thinking this, the lion spoke on behalf of the cave, "welcome, please come in!"

The lion spole these words softly but the sound echoed far and wide. The fox thought, "I've been living here since my childhood, but I've never heard the cave speaking. Surely, some other creature is inside the cave. From the voice it appears that a lion is there inside. How can the lion's voice remain un recognised?" The roaring was echoed by the forest. The clever fox soon understood that the lion wanted to play a trick on him, but he would not be deceived easily.

The fox thought, "Hm, my presence of mind saved me as well as other creatures of the forest. The roaring voice of the lion has reached the farthest corner of the forest. So no creature will come this side now."

Why should the fox enter the cave after knowing that there was a lion inside it? It fled away.

The lion had to pass the night without food. In the morning it left the cave. Now the lion realised its mistake.



# THEEPAVALI

## Theepa - olli + Deepavali (Theepavali)

Long ago in a town called Pinakjothy puram, there lived Narakasuran. He thought of Barmah and did very seious tapas and obtained lots of great gifts. He became very proud of his powers. He ill-treated all the people in the three worlds.

The king of the Devas (Indra) fought with him and lost the battle. Narakasuran took away the beautiful ear-rings worn by Indra's mother and went back to his won town. There were also sages (holy men) who were ill treated by Narakasuran. They and Davas went to Lord Krishna in Dwrakapuri and asked Him to save them from the cruel Asuran.

Lord Krishna and his wife sathyabhaama (Sathyapama) went to fight with the Asuran. Lord Krishna defeated the asuran's great army. The asuran become very angry and used his powerful weapons and fought with Lord Krishna, Krishna fainted and Sathyabhaama was very sad; she revived Krishna, then she used many powerful weapons against the Asuran. He was bleeding from all the wounds and, although he fainted a little, he revived and started fighting again. Then Krishna sent his chakra and it cut his body into two halves and the Chakra returned to Krishna

While the Asura was dying he repented for all his sins and prayed to Lord Krishna to forgive all his sins and save him. He also asked Krishna to have mercy and for a boon:- "Iam a bad man and am being destroyed. Let all the people celebrate this as a happy day; please give me this gift". "To-day all people have been saved from the cruel Asura, so it is a happy day for all. So on this day they must think of me, bathe in the early morning, wear new clothes, go and worship in the temples, give gifts, then they should get the benefits and grace as though they have performed a big Yagna". Thus Lord Krishna granted the Asura's wish and sent tim to heaven.

Krishna then made the Asura's own pakathathan, king of perakjothypura and returned to His own town of Dwraka.
So the day that Narakasuran died, is celebrated as Deepavail.
Another puranic account of Theepavali is as follows:-

Long ago one Asura captured Mother Earth and took Her under the ocean, Lord Vishnu took the form of a great boar (Varaka), went into the ocean and killed the Asura and seved Mother Earth. Then from the Lords perspiration and Mother Earth, Narakasuran was born. Narakasuran had asked Brahma, to give him the gift, that he should only die by a mother's hands; so the story says that Mother Earth was bone as sathyapama. When he was dying Narakasuran realised that Sathyppama was his own Mother Earth and worshipped her.

So this Deepavali Day is celebrated to remember the destruction of evil and of evil men.

In the Puranas are many stories of the evil asuras fighting with the good Devas. Many people do not believe these stories, they think they are all make believe stories, but it is not true.

These Puranic stories, show the way to a good life. Good and evil (punya and pava) are like sunlight and shadow, darkness and light, happiness and sorrow, cold and heat, fame and notoriety. These are the secrets of the Lord's Leela. It is difficult to experiment on these matters but you can realise the experiences. Unless you have experienced sickness, it is difficult to fully appreciate good health; when you experience sickness, it is difficult to fully appreciate food helth; when you experience sorrow you understand what is happiness. The world is made up if these opposites, these giving meaning to living; so one must try to think carefully and understand the Lord's Leelas.

During the evil rule of Narakasuran, People were afraid to go out of their houses, no prayers were held in the temples, so houses and temples were in darkness. Thus when the Asura died, the Devas got back their Kingdom, all the people in prisons were released, all lighted lamps and prayed to God. People visited relatives and friends and together celebrated the good day. There was brightness joy everywhere.


So the real meaning of Deepavali is that all get the light of knowledge (Gnana Oli) and that such knowledge (Divine knowledge) is joy.
We rub the oil of good thoughts on our body [Nallennai (good oil) gingerly oil]. It is interesting that the work Nallennai sounds close to Nall ennam (good thoughts). Thus as we rub our external body with Nallennai- we should clean our inner body with Nallennam. Also with our intellect (lime and tamarind) we clean the dirt in our hair. We then wear the clean new clothes of gnana and make ourselves clean and pure.

The indriyas (sauras) we burn (by burning the fireworks) and there is joy.

Thus even without knowledge and realisation there will be joy and brightness in our hearts.

This is a special day of joy for women, for their courage and goodness.

Sathyapama fought for the destruction of evil and establish goodness, joy and Dharma. It shows the courage and goodness that women are capable of. Thus Deepavali is remembered for the greatness of Lord Krishna and the courage of Sathyapama.


விருந்து புறந் தந்து இறுதியில்......
திருநாவுக்கரசர்
......சமணத் துறவியானார்.
பின்னர் பாடலி சென்று புலமைபெற்று வாதத் திறமை யால் வென்று ..

# கட்டுரைப்போட்டி

## கலசத்தின் 25ஆவது மலர்

வெளியீட்டையொட்டி கலச வாசகர்கள் மத்தியில் இப்போட்டியினை நடாத்தஉள்ளோம்.

### பிரிவு 1

**( 12 வயதிற்குட்பட்டவர்கள்)**

தலைப்புகள்:

எனது சமயம் **(My Religion)**

நான் விரும்பும் கடவுள்

**(The God I like)**

நான் பார்த்த கோயில் திருவிழா

**(About a temple festival I saw)**

**தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுதலாம்.**

**கட்டுரைகள் கலசத்தின் ஒரு பக்கத்துக்குக் குறையாமல் இருக்கவேண்டும்**

**பரிசு : தங்கப்பதக்கம்**

### பிரிவு 2

**( 12 – 21 வயதுதுக்குட்பட்டவர்கள்)**

தலைப்புகள்:

**சமயம் எங்களுக்குத் தேவையா?**

**(Why do we need religion?)**

இந்து சமயம்

**(Hinduism)**

**கோயில்கள் எங்களுக்குத் தேவையா?**

**(Do we need temples?)**

**தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுதலாம்.**

**கட்டுரைகள் கலசத்தின் இரு பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்**

**பரிசு : தங்கப்பதக்கம்**

### பிரிவு 3 ( 21 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

சமயமும் சமய குரவரும் ,இருபத்தோராம் நூற்றாண்டில் சைவம், கோயில் வழிபாடு,

நமது மதம் இக்காலத்துக்கு ஏற்ப மாறியிருக்கிறதா?,

மதம் மனிதனுக்கு அபின் என்ற கூற்றை ஆராய்க

**தமிழில் மட்டும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

**கட்டுரைகள் கலசத்தின் நான்கு பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல்வேண்டும்**

**பரிசுகள்: £100, £70, £30**


தமிழ்ப்பாடசாலைகள் மூலமாகப் பங்குபற்ற விரும்புபவர்கள் உங்கள் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளலாம். ஆலயங்கள் மூலமாகப் பங்கு கொள்ள விரும்புபவர்கள் ஆலய முகாமையாளர்களை அணுகலாம். தனிப்பட பங்குபற்ற விரும்புபவர்கள் கலசம் முகவரிக்கு உங்கள் பெயர் தொலைபேசி எண்களை அனுப்பி வைத்தால் நாங்கள் அதற்கான நடைமுறைகளை உங்களுக்குத் தெரிவிப்போம்

கட்டுரைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி

***30 – 10 – 1998*** கட்டுரை அனுப்பவேண்டிய முகவரி

**42, Stoneleigh Road, Clayhall, Ilford, Essex, IG5 OJD**

# திருமுருகாற்றுப்படை



வித்துவான் துரை வள்ளி

சங்ககாலம் தமிழக வரலாற்றின் ஒரு பொற்காலம். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை கொண்டது மதுரை மாநகரம்.

சங்கத்தமிழ் மாலை முப்பதும் தப்பாமே என்று ஆண்டாள் திருப்பாவையில் பாடியிருக்கின்றார். நாவீறு படைத்த நற்றமிழ் புலவர்கள் மத்தியில் எந்த நூலும் சங்கத்தில் ஏறிய போதுதான் தமிழ் நூலுக்கே மதிப்பு உண்டாயிற்று. கடைச்சங்க காலத்தில் எழுந்த பல நூல்கள் கிடைத்திலது. பின் வந்தவர்கள் கிடைத்த பாடல்களை வகைப்படுத்தினர். பத்து நெடிய பாடல்களையுடைய பத்துப்பாட்டு, சிறிய சிறிய பாடல்களைக் கொண்ட எட்டுத்தொகை, பதினெட்டு நூல்களை ஒன்றாகச் சேர்த்த தொகுதியாம் பதினெண் கீழ்க்கணக்கு இவை மூன்றுமே கடைச்சங்க நூல்களாகும்.

பத்துப்பாட்டில் முதல் ஐந்து பாடல்கள் ஆற்றுப்படைகள். திருமுருகாற்றுப்படை, பெருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகாடாம் அல்லது கூத்தராற்றுப்படை, சரிபாதி ஆற்றுப்படைகளால் அமைந்த தொகுதி அந்தப்பத்துபாட்டு. அதில் முதல் பாட்டாக நிற்பது திருமுருகாற்றுப்படை.

முதலில் நிற்பது ஏன்?.

தமிழர்களுக்கு எப்போதுமே கடவுள் பக்தி மிகுதி. உள்ளத்து உணர்வுகளை நாவசைத்து வெளிப்படுத்த அறிவதற்குமுன்பே, மலையுச்சியில் இயற்கையழகைக் கண்டு முருகு என்ற அழகிய சொல்லால் இறைவனைக் கண்டவர்கள் தமிழர்கள். முருகனை முருகத் திருவுருவத்தில் வழிபட்டுக் கோயில் அமைத்து நூல்கள் பாடி அதனால் இன்பம் பெற்றவர்கள் தமிழர்கள். இதனைக் கருதியே திருமுருகாற்றுப்படை முன்னர் வைக்கப்பட்டது. தமிழர்கள் சிவபெருமானையும், திருமாலையும், கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகியவர்களையும் வருணன், இந்திரன், சந்திரன் சூரியன் ஆகியோரையும் போற்றி கொண்டாடினாலும் முருகனுக்குத் தனிச்சிறப்பு அளித்தார்கள்.

இந்நானிலத்தைத் தமிழர்கள் ஐந்து பகுதிகளாகப் பிரித்தார்கள். பெரியவர்களை உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுவதுபோல், தமிழர்கள் முருகனை உயர்ந்த இடத்தில் வைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். முதல் திணையாகிய குறிஞ்சிக் கடவுளாகக் கண்டார்கள். மலைக்கிழவன், குறிஞ்சித் தலைவன் என்றும் போற்றினார்கள். முதல் திணையில் முதற் கடவுள் என்று வைத்து வழிபட்டார்கள். உலகம் தோன்றும் போது முதலில் தோன்றியது மலை.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி என்று தமிழர்கள் தங்கள் குடியின் பழமையைப் பற்றிக் கூறிப் பெருமிதம் கொள்வார்கள். சிவப்பிரகாச சுவாமிகள் பாவுள் முந்துற வந்து நிற்கும் முருகாற்றுப்படை மொழிந்தான். என்று திருமுருகாற்றுப்படையின் சிறப்பை விளக்கியுள்ளார். கடைச்சங்க நூல்கள் முப்பத்தாறுள் திருமுருகாற்றுப் படைத் தத்துவங்கள் முப்பத்தாறுள் முன்னிற்கும் சிவதத்துவம்போல் அது விளங்குகின்றது.

பத்துப்பாட்டிலும் பதினோராந் திருமுறையிலும் பெருமை பெற்று விளங்கும் திருமுருகாற்றுப் படையை இலக்கிய நூல்கள் சிறந்த இலக்கியமாகவும் முருகன் பெருமையை உரைக்கும் நூல்களில் பழம்பெருமை வாய்ந்த நூலாகவும் கருதிப் புலவர்களும் பக்தர்களும் இன்றும் போற்றி வருகிறார்கள்.

ஆறுப்படை என்பது படுத்துதல், செலுத்துதல் வழிகாட்டுதல் என்று பொருள்படும். இப்படி ஆற்றுப்படுத்து கிறவர்கள், கூத்தர், பொருநர், விறலியர், பாணர் என்ற நால்வரெனத் தொல்காப்பியம் கூறுகிறது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்**

எனத் தொல்காப்பியம் ஆற்றுப் படைக்கு இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளது.

கலைஞர்களும் புலவர்களும் கற்றோர் உலகத்தில் உலவிவருவதால் உண்மை உலகத்தைப் பற்றிய கவலையின்றி நாளை வேண்டுமே என்ற கவலையின்றித் தான் பெற்ற இன்பத்தை மற்றவர் பெற வழி காட்டி அறிவுலகை மட்டுமே எண்ணி வாழ்ந்தனர். எனவே ஆற்றுப்படைக்கு வறியவன் ஒருவன். பரிசு பெற்றுவரும் ஒருவன், பரிசு தருபவன் ஒருவன் என மூவர் இன்றியமையாதவர்கள்.

***நக்கீரர்***

முருகனைக் காணவேண்டும் கண்டு பயன்பெறவேண்டும் என்ற ஆர்வம் உடைய புவலன் ஒருவன் இருக்கின்றான். அந்தப் பெருமானுடைய அருளைப் பெற்ற மற்றொரு புலவர் அவனைக் கண்டு இன்ன வழியில் சென்று இன்ன இடத்தில் கண்டால் முருகனுடைய தரிசனம் கிட்டும். அவன் திருவருளையும் பெறலாம் என்று சொல்லும் வகையில் அமைந்தது திருமுருகாற்றுப்படை. இதனைப் பாடிய நக்கீரர் மதுரைக் கணக்காயனார் மகனார். நக்கீரர் பத்துப்பாட்டிலுள்ள நெடுநல் வாடையையும் இ.யற்றியவர். சொல் வன்மைமிக்க நக்கீரர், சங்கப் புலவர்களின் தலையாயப் புலவர்.

***கவி பிறந்த கதை***

பாண்டியன் ஒரு நாள் மாலை அரண்மனை மேல் மாடத்தில் தன் மனைவி ஆற்றிக் கொண்டிருந்த கூந்தலிலிருந்து என்றுமிலாத ஒரு மணத்தை நுகர்ந்தான். பத்மினி சாதிப் பெண்களுக்கு இயற்கையாகவே உடம்பில் ஒரு தனிமணம் இருக்கும். என்றும் அவர்களது கூந்தலுக்கு இயற்கை மணம் உடையது எனவும் நூல்கள் கூறு கின்றன. அதனை உணர்ந்த பாண்டியன் உலகுக்கு அறிவிக்க புலவர்களை அழைத்து ஒரு நறுமணத்தை மாலையில் நான் நுகர்ந்தேன் அதை நீங்கள் பாடவேண்டும் என்றான் . புலவர்களும் பாண்டியனை மகிழ்விக்கப் பாடினார்கள் பாண்டியன் விரும்பிய நன் மங்கையர் கூந்தலுக்குள்ள இயற்கை மணத்தைப் பாடி மகிழ்விக்காமல் பாண்டியர் தேவியின் கூந்தலையும் அழகையும் பாடினார்கள். வருந்திய பாண்டியன் சங்கத்தில் ஆயிரம் பொற் காசுகள் உடைய கிளியைக் கட்டி மண்டபத்தில் வைத்து என்னுடைய கருத்துக்கிசைந்த பாடலை யார் பாடுகிறாரோ அவர் இந்த கிளியைப் பெறலாம் என்று முரசு அறிவித்தான்.

மதுரையில் சுந்தேரசப் பெருமானுக்கு வழிவழி அடிமை செய்து பூசையாற்றி வரும் தருமி என்ற பிரமச்சாரி மூலம் கொங்கு தேர் வாழ்க்கை எனத் துவங்கும் பாடலை இறைவனே எழுதி அதனைத் தருமியிடம் கொடுத்து இதனைக் கொண்டு போய் பாண்டியனிடம் பாடி ஆயிரம் பொற்காசு பெற்று மகிழ் வடைவாயென இறைவன் திருவாய் மலர்ந்தான். தருமியின் பாடலைக் கேட்டுப் பாண்டியன் பேருவகை அடைந்து பொற்கிளி அளித்தான். முன்பே பொறாமை உள்ளம் கொண்டிருந்த நக்கீரர் கோபம் தருமியின் மேல் திரும்பி கவியில் சொற்பிழையில்லை பொருள் பிழை உள்ளது, நீ இதைச் சொல்லித் தந்த நற்கவிப் புலவன் தன்னைக் கொண்டுவா என்றார்.

நக்கீரர் தம் உள்ளத்துள் அதை நல்ல கவி எண்றுணர்ந்தார். ஆனால் அதை ஏற்பதற்கு அவருடைய அகந்தை இடம் கொடுக்கவில்லை.

தருமி வருந்தி ஆண்டவனை வணங்க எம் பெருமானே உமது பாட்டுக்குப் பிழை சொல்லி விட்டான் ஒரு புலவன் என்று புலம்பினான். அனைத்தும் உணர்ந்த இறைவன் நக்கீரருடன் வாதிடப் புறப்பட்டார். இருவருக்கும் வாதம் நிகழ்ந்தது. மன்னன் அவையில் வந்தவன் சிவபெருமான் என்பது யாருக்கும் தெரியாது.

நக்கீரர் சொற்பிழை யாதுமில்லை பொருளிலே தான் பிழையுள்ளது என்று துணிந்து சொன்னார். இறைவன் நன்மங்கையர்கள் பத்மினி சாதிப் பெண்கள் இவர்களது திருமேனியில் மணமும் கூந்தலில் நறுமணமும் உண்டு என்று வாதிட்டார்.

நக்கீரர் அது வெறுங்கற்பனை என்றார். நக்கீரரின் அகந்தை வளர்ந்து கொண்டே போயிற்று. உத்தமசாதிப் பெண்களின் கூந்த லுக்கு மணம் இல்லை என்று சொல்லி இறைவனது நெற்றிக்கண் தீப்பொறியால் தண்டிக்கப்படுகிறார் நக்கீரர்.

அறிவினால் சிறந்த நக்கீரர் அகந்தையினால் கீழ் நிலைக்கு வந்து நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே. என்று சாதித்தார். இறுதியில் இறைவனது நெற்றியின் தீப்பிழம்பு நக்கீரரை வெதுப்பியது. அங்க மெல்லாம் தொழுநோய் தோன்றி பொற்றாமரை குளத்தில் வீழ்ந்தவுடன் அவருக்கு உணர்வு தோன்றி இறைவனிடம் பிழையை மன்னிக்கவேண்டும் என்று மன்றாடினார். இறைவன், நீ எனக்கு குற்றம் செய்ததினால் தவறு இல்லை ஆனால் நன்மகளிர்க்கு பெரும்பழி புரிந்தனை. நீ கையிலாய தரிசனம் கண்டால் உன் நோய் நீங்கும். என்று சொல்லி மறைந்து போனான்.

நக்கீரர், கைலாயம் எங்கே ? நாம் எங்கே? என்று மனம் வெதும்பி இறைவன் ஆணையை மறுப்பதற்கும் இயலாமல் விதியை எண்ணி விடைபெற்றுக் கொண்டு மதுரை விட்டுப் புறப்பட்டார். அவர் புறப்பட்ட போது இரங்கியதைச் சிவப்பிரகாச சுவாமிகள்

**என்றினி மதுரை காண்பேன்**
**எப்பகல் சவுந்தர ரேசன்**
**தன்திரு வடிகள் காண்போம்**
**வெற்றிவேல் தரும் வேந்தர்**
**வேந்தனை எந்நாட் காண்போம்**
**ஒன்றுயிர்த் துணையாம் சங்கத்**
**துறவை எப்போதும் காணபோம்**

என்று சீக்காளத்திப் புராணத்தில் உருகிப்பாடுகின்றார்.

நக்கீரர் திருப்பரங்குன்றத்திற்குப் பக்கத்தில் வந்து சேர்ந்தார். அப்போது பூசை செய்யும் நேரமாயிற்று. நாளும் சிவபூசை செய்கின்ற நக்கீரர் ஒரு பொய்கைக் கரையில் அமர்ந்து சிவபூசை செய்யத் தொடங்கினார். அவர் பூசை செய்யும் போது அக்கரையிலிருந்த ஆல மரத்திலிருந்து ஒரு பழுப்பிலை கீழே விழ அதன் ஒரு பகுதி நீரிலும் மற்றொரு பகுதி நிலத்திலும் கிடந்தன. திடீரென்று நீரில் கிடந்த பகுதி மீனாகவும் நிலத்தில் கிடந்த பகுதி பறவையாகவும் மாற ஒன்றினையொன்று இழுத்துக் கொண்டது. சிவபூசை செய்த நக்கீரரது மனம் இந்த

அதிசயத்தின் மேல் ஒன்றியது. சிவபூசை செய்யும் பொழுது மனம் திரும்பிய குற்றத்திற்காக கற்கிமுகி என்ற பூதம் நக்கீரரை எடுத்துச் சென்று அருகிலிருந்த குகையில் அடைத்து விட்டது. குகைக்குள் சென்ற நக்கீரர் தமக்கு முன்னே அங்கே 999 பேர்கள் கூட்டாக இருந்ததைக் கண்டார். 1000பேர்கள் நிரம்பி யவுடன் ஒரு நாளில் அவர்களை யெல்லாம் பூதம் உண்டு இன்புறும் என்ற அச்சத்தில் இருந்தவர்கள் நக்கீரரை வெறுப்புடன் பேசி னார்கள். நக்கீரர் சிந்தனை செய்தார். தான் செல்லும் இடத்திலும் தீங்கு நிகழ்ந்ததே என்று இறைவனை எண்ணி உள்ளம் உருகி வேண்டினார். அவர் இருந்த இடம் குகை ஆகையால் குகனாகிய மருகப் பெருமானது நினைவை உண்டாக்கியது. நக்கீரர் உள்ளத்தில் பாட்டு எழுந்தது. அப்பாடல் 317 அடிகளாக வளர்ந்து திருமுருகாற்றுப்படை என்னும் பெயரைப் பெற்றது. அந் நூலைப் பாடியவுடன் முருகன் எழுந்தருளிப் பூதத்தை மாய்த்து நக்கீரரோடு அக்குகையில் அடைபட்டு கிடந்த எலலோரையும் விடுவித்தான்.

நக்கீரர் முருகப்பெருமானது திருவடிகளில் வீழ்ந்து எம்பெருமானே நாயேன் செய்த பாபம் கணக்கற்றது. சிவபெருமானுக்கு பிழை செய்து தொழுநோய் பெற்றேன். அது நீங்க கையிலாய தரிசனம் கண்டால் உன் நோய் நீங்கும் என்று சொல்லி மறைந்து போனான். நான் எப்போது கைலாயத்தைப் பார்ப்பது எப்போது உடல் நலம் மீண்டும் பெறுவது? புலவர்களோடு எப்போது பழகுவது நீர் தான் அருள் செய்ய வேண்டும் என வேண்டி நின்றார்.

முருகப்பெருமான் நக்கீரரது வேண்டுகோளை ஏற்று என் தந்தைக்குச் செய்த பிழை பிழைதான். அவர் ஆணையின்படியே கைலாய தரிசனம் செய்தால் தான் உன்நோய் தீரும். ஆனாலும் என்னைப் பாடி பரவியதால் ஓரளவு உனக்கு உபகாரம் செய்கின்றேன். நீ பாதி தூரம் கைலாயத்தை நோக்கிச் செல் அது உன்னை நோக்கி பாதி தூரம் வரும். நீ காளத்தி சென்றால் எனக்கு கைலாய தரிசனம் கிடைக்கும் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்து போனார். முருகப் பெருமான் நக்கீரரை காளத்திற்குப் போகச் சொன்னதில் ஒரு பொருத்தம் இருக்கிறது. காளத்தியில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் திருநாமம் ஞானப் பூங்கோதை என்பது அம்பிகை யினுடைய கூந்தல் ஞானமணம் வீசுவது என்ற கருத்தை அந்தப் பெயர் புலப்படுத்துகிறது. உமாதேவியரின் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் இல்லை என்று வாதிட்ட குற்றத்தை செய்தவர் நக்கீரர். எனவே அங்கே சென்றால் அப்பெருமானின் திருவருளால் உணர்வு பெற்று பாவம் நீங்கும் என்ற எண் ணத்துடன் முருகப்பெருமான் நக்கீரரை காளத்திற்குப் போகச் சொன்னார். நக்கீரர் காளத்திற்கு வந்து அங்கே ஓடும் பொன்முகலி என்றும் ஆற்றில் நீராடி எழுந்த போதே அவருக்கு கைலாய தரிசனம் அளிக்கப்பட்டது. ஆண்டவன் திருவருள் சிறப்பை எண்ணி வியந்து அவன் திருவருளைப் பெற்றவர்களது நன்மைகளையம் பெறாதவர்களது தீங்குகளையும் தொகுத்து கோபப்பிரசாதம் என்னும் நூலை இயற்றினார். கையி லைபாதி காளத்தி பாதி அந்தாதி என்ற நூலையும் திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்ற நூலையும் பாடினார். பின்னர் மீண்டும் மதுரை வந்து சேர்ந்தார். இறைவன் பாடிய கொங்குதேர் வாழ்க்கை என்ற பாடலுக்குக் குறை கூறியதில் தொடங்கிய இந்த வரலாறு திருமுருகாற்றுப்படையையும் காளத்தித் தொடர்பான பிறநூல் களையும் நக்கீரர் இயற்றிப் புகழ்ந்ததோடு நிறைவ டைகின்றது.

திருமுருகாற்றுப்படை, கம்பரா மாயணம் பெரியபராணம் ஆகிய நூல்கள் உலகம் என்ற மங்கல சொலலோடு தொடங்குவது போல திருமுருகாற்றுப்படையும் உலகம் உவப்ப என்று தொடங்குகின்றது. திருமுருகாற்றுப்படையில் முருகப் பெருமானுடைய திருமேனி அழகை பலவாறாக புகழ்ந்து பாடுகின்றர். முருகனுடைய திருமேனியை மிகப் பெரிய சுடரான கதிரவனுக்கு உவமையாக்கிக் காட்டுகின்றார்.

உலகம் உவப்ப வலன்ஏர்ப் திரிதரு
பலர் புகழ் ஞாயிறு

என்ற திருமுருகாற்றுப்படை உதயமா கின்றது. முருகப்பெருமானுடைய பேரொளியானது காலம் கடந்து இடம் கடந்து ஒளிருவது என்பதை

ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி என்ற ஓர் அடியில் நக்கீரர் விளக்குகிறார்.

***திருவடி***

முருகனுடைய ஒளிப்பிழம்பான திருமே னியை முதலில் கூறிய நக்கீரர் அப்பெருமானுடைய அங்க அடையாளங் களைக் காட்ட வருகிறார். மனிதனுடைய உடம்பில் 32 அங்கங்கள் இருக்கின்றன. 5 வகையான இந்திரியங்கள் இருக்கின்றன. காண்பதற்கும் கேட்பதற்கும் மணம் நுகர்வதற்கும் சுவை நுகருவதற்கும் பரிசத்தை பெறுவதற்குமான ஐந்து இந்திரி யங்களை நாம் பெற்றிருக்கின்றோம். அறிவின் நிலையமாகிய மூளை தலையில் இருக்கின்றது. அதோடு மனிதன் நிமிர்ந்து நின்றவன் இதன் சிறப்பை கருதி வட மொழியில் அதை உத்தமாங்கம் என்று சொல்வார்கள். இறைவ னுக்கும் தலை தான் சிறந்தது என்று சொல்லலாமா அது தவறு. இறைவனைக் காட்டிலும் அவன் திருவடியே சிறந்தது என்பதைப் பரிபாடலில் புலவர் நின்னில் சிறந்த நின் தாளிணையவை எனப் பாடுகிறார். வள்ளுவர் தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை ஆற்றல் அரிது. என்று கூறுகிறார். ஆகவே ஒளிப்பிழம்பாகிய முருக னைக்காட்டிய நக்கீரர் அவனது திருத்தாளை

உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன்தாள்

என்று பாராட்டுகிறார். இதனை அப்பர் பெருமான்

**தன்கடன் அடியேனையும் தாங்குதல்**
**என்கடன் பணிசெய்து கிடப்பதே** என்றார்.

**திருக்கரம்**

அடுத்தபடியாக முருகப் பெரு மானுடைய திருக்கரத்தைப் பற்றிச் சொல்ல வருகிறார் நக்கீரர். அது துன்பத்தை நீக்கி தன்பால் வந்து சேருபவர்களை அழித்து இடிபோல் முழங்குகின்ற கைஅது என்று செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை

என்று வரிகளால் விளக்குகின்றார்.

அடுத்து திருப்பரம் குன்றம் முதல்படை வீடு மட்டுமன்றி தேவயானை திருமணம் நடந்த இடம் என்பதை

மறுவில் கற்பின் வான்நுதல் கணவன்

என்ற வரிகளால் சிறப்பிக்கின்றார்.

கற்பு என்பது இங்கே மனத்தைக் குறிப்பது. தமிழ் இலக்கணத்திற்கு ஏற்ப முருகப்பெருமான் களவின் வழி வள்ளித் திருமணமும் கற்பின் வழி தேவயானைத் திருமணமும் நிகழ்த்தியவர்.

நக்கீரர் முதலில் முருகனது

ஒளிப்பிழம்பைக்காட்டி பிறகு திருவடியைக் காட்டி திருக்கரத்தைக் காட்டி அக்கரத்தினால் பற்றிக்கொண்டு மணவினை புரிந்த தேவயானையைக் காட்டி முருகனது பெருமையைச் சொல்கிறார். அதன் பின் அவனது திருமார்பில் அணிந்துள்ள கடம்ப மாலையையும் காந்தள கண்ணியையும் சொல்லவருகின்றார். முருகனது போகத்துக்குரிய மாலையாகத் திகழ்வது கடப்ப மாலை. போர்க்காலத்தில் அடையாள மாலையாக அணிவது காந்தளங் கண்ணி பின்னர் பல்வேறு மலர் மாலைகளை அணிந்து முருகனை வாழ்த்திய பெண்கள் பலர். அவர்களது பாடல் மலைச்சாரலில் எதிரொலி எழுப்புகிறது என்றும் மரங்கள் செறிந்த குழுவில் முருகனுடைய காந்தள் மலரு கிறது என்றும் வண்டுகளும் மொய்க்காமல் மலர்ந்திருக்கிற காந்தள் மலராகிய கண்ணியை அணிந்திருப்பவன் முருகன் என்றும் வருணனை செய்கிறார்.

**செவ்வேல் சேய்**

முருகனது சோதிப்பிழம்பு , திருவடி, திருக்கரம், திருமார்பில் தவழும் காந்தள் மலர் தேவலோக மகளிர் முருகனைப் பரவியது ஆகிய எழில்மிகு செய்திகளைக் கூறிவந்த நக்கீரர் அடுத்து ஒருவகைக் கூத்தைச் சொல்ல வருகிறார். முருகன் திருக்கரத்தில் உள்ள வேலின் பெருமையைச் சொல்ல வந்தவர் வேலொடு சேர்த்துப் போர்க்களத்தின் சிறப்பை அழகாக வருணித்துச் செல்கிறார். எழில்சூழ் நிலையில் அழகே போர்க்களத்தை எண்ணி அங்கே வெற்றி பெற்ற முருகளைப் பாடி ஆடுகிறாளாம். கடலுக்குள் புகுந்து ஒளிந்துகொண்ட சூரனைத் தண்டித்த வேலின் பெருமையை

பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடுவேல்

என்ற வரிகளால் புகழ்ந்திருக்கின்றார். சூரனை வதைத்து வெற்றி கொண்ட சிறப்பை சூரசம்ஹாரம் என்று இன்றும் ஆலயங்களில் விழாக் கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றோம்.

ஆற்றுப்படையில் இனிய புலவனை ஆற்றுப்படுத்தும் செய்தி வருகிறது. முருகனிடத்தில் அன்பு கொண்டு அவனது திருவடியை அடைய வேண்டுமென்று விரும்பும் ஒரு புலவனைப் பார்த்து முருகப் பெருமானுடைய திருவருள் பெற்ற மற்றொரு புலவன்.

இவ்வாறு சென்றால் முருகப் பெருமானைக் கண்டு இன்புறலாம். என்று சொல்லும் வகையில் அமைந்திருக்கின்றது. இதுவரை முருகனை வர்ணித்த புலவர் இனி எதிர்நின்ற புலவனை பார்த்து அவன் புறப்பட்டதை பாராட்டி ஆற்றுப்படுத்தத் தொடங்குகிறார்.

நல்ல பயணம்.

எதிர்வரும் புலவனிடம் முருகன்.

எய்யாநல்லிசை செவ்வேற் சே எய் என அறிமுகம் செய்கிறார். நக்கீரர் முருகனைக் காணச் செல்லும் புலவனுக்கு ஊக்கம் உண்டாக்கும் வகையில் பேசுகிறார். இவ்வுலகப் பற்றில் திளைத்து இருக்கும் நமக்கு ஆண்டவனிடம் காதல் மீதூர்ந்தால் எந்த பற்றையும் விடும் உறுதி வந்துவிடும் என்பதை உறுதிபடக் கூறுகின்றார் முருகனது உள்ளத்தை

**சேவடி படரும் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கை புலம்பிரிந்து உறையும்**
**செலவ** என முருகனைக் காணச் செல்லும் பயணப் பெருமையை விவரிக்கின்றார். நிலையற்ற வாழ்க்கையில் இந்த பயணம் நிறைவு பெறுவது அவன் திருவுள்ளத்தைப் பொறுத்தது. எனவே விரைந்து செல்க என்று பயணம் புறப்பட புலவனைப் பார்த்து இன்னே பெறுதிநீ முன்னிய வினையே என்று கூறுகின்றார். இறைவனைக் காணவேண்டும் என ஆர்வத்தோடு புறப்பட புலவனுடைய தகுதியை

**நலம்புரி கொள்கைப் புலம் பிரிந் துறையும்**
**செலவு நீ நயந்தனை** என்று காட்டினார்.

இனி முருகப் பெருமான் எழுந்தருளிமிருக்கும் இடங்களைச் சுட்டிக்காட்டி வருகின்றார். மதுரையில் வாழ்ந்த நக்கீரர் திருமுருகாற்றுப்படை பயணத் தைத் திருப்பரங்குன்றத்திலிருந்து தொடங்கி திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் பின்பழமுதிர்ச்சோலை இப்படி வலமாக வரும் பயணத்தை விளக்குகின்றார்.

இப்படி கூறிய நக்கீரர் முருகனாகிய வள்ளல் வேண்டியாங்கு வேண்டிய இடத்தில் காட்சி தருவான். இதை நான் அனுபவத்தில் கண்டிருக்கின்றேன்.

**வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட**
**ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே**
என ஐயம் நீங்கத் தெளிவுறுத்தினார்.

**மூவகை இடங்கள்.**

முருகன் திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவானின்குடி திருவேரகம் என்னும் கோயில்களையுடைய தலங்களில் எழுந்தருளிமிருக்கிறான் என்பதை முன்னர் கூறி கோயில் இல்லாது காடு ஆறு குளம் என்ற அடையாளமே இல்லாத இடங்களிலும் அவன் நீக்க மற நிறைந்திருக்கின்றான் என்பதை பின்னரும் கூறி அழைத்துச் செல்லும் பாங்கு ஆண்டவனை உருவத்தில் கண்டு வழிபட்டுப் பின்பு உருவமும் அருவமும் இணைந்த லிங்க உருவிலே வழிபட்டுப் பின்பு அருவாகிய நிஷ்கல உருவத்திலே வழிபடும் முறையை போலவும் விளக்குகிறார் நக்கீரர்.

***திருநாமங்கள்.***

வழிபடும் முறைகளை கூறிய நக்கீரர் முருகன் திருநாமங்கள் அர்ச்சனை செய்வதற்கு ஏற்றபடி அடுக்கிக் கூறுகின்றார்.

முருகனை இந்த நாமங்களைச் சொல்லி நீ வாயாற துதிப்பாயாக என்று முருகனுக்குரிய நாமங்கள் 26ஐ சொல்கிறார் காத்திகேயன் சிவகுமாரன் மலை மகள் கொற்றவைச் சிறுவன் பழையோள் குழவி தேவசேனாதிபதி மாலைமார்ப்பன் நூலறிபுலவன் பெருவீரன் அந்தணர் செல்வம் அறிஞர்போற்றுபவன் ஆடவரில் சிறந்தோன், வேலாயுதன் குன்றம் எறிந்தவன் குறிஞ்சிக் கிழவன் , புலவர் ஏறு, பெரும் பெயர் முருகன், பேரிசையாளன் , அலந்தாமரைக் காப்பவன், பரிசிலரை தாங்குபவன் , மிகப்பெ ரியவன், சூரசம்காரன், போர்மிகு பொருநன், அளப்பரிவன், ஒப்பார் இல்லாதவன், என முருகனைக் கருணைக் கடவுளை பல்வேறு நாமங்களால் துதித்து தான் பெற்ற பேறவரும் பரிசிலை எதிர்வரும் புலவனும் பெற்று இன்பம் துய்க்க வேண்டும் என ஆற்றுப்படுத்துவதே திருமுருகாற்றுப்படை ஆகும்.

உலகம் உவப்ப எனத் தொடங்கும் திருமுருகாற்றுப்படை, பழமுதிர்சோலை மலைக்கிழவோனே என்னும் ஈற்றடியோடு தெய்வத்திருவருள் பெறும் நூலாக விளங்கி நம்மையெல்லாம் முருகப் பெருமானின் திருவருள் பெறவழி காட்டி நிற்கின்றது.

# நன்றி மறவாமை



**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

இது வள்ளுவர் வாய்மொழி.

இப்பிறப்பில் மனிதனாய்ப் பிறந்த ஒருவன் தனக்கென்று இறைவன் அளித்திட்ட நல்லபல பண்புகளால் மற்ற உயிரினங்களினின்றும் வேறுபட்டு அப்பண்புகள் நிறைந்த செயல்களால் உலகோர் மெச்ச வாழ்ந்து , தான் இறந்தபின்னும் தன் பெயர் இவ்வுலகில் நிலைக்கச் செய்தல் அவசியம்.
அவ்வாறான நல்ல பண்புகளில் மிகவும் முக்கியமானது செய்ந்நன்றி மறவாமை என்றால் அது மிகையாகாது.
இவ்வுலக வாழ்க்கையில் எந்த ஒரு மனிதனும் எல்லாவிதமான செயல்களுக்கும் மற்றவரை அண்டியே இருக்க வேண்டியிருக்கிறது. முதலில் நாம் இப்பிறவி எடுக்க காரணமான நம்முடைய பெற்றோர்கள் பிறகு வளர்ந்து கல்வி கற்க உதவும் ஆசிரியர்கள். தொடர்ந்து வேலை வாய்ப்பு பொருள் ஈட்ட அரசாங்கம் தொழிலதிபர்கள் இடையில் ஏற்படும் இடர்பாடுகளை எல்லாம் எதிர்கொண்டு நல்ல முடிவினை எடுக்க ஆலோசனை பெற உற்ற நண்பர்கள். இப்படியாக வாழ்க்கையின் அனைத்து கட்டங்களிலும் மற்றவர்கள் நமக்கு உதவி செய்வது உலக இயல்பு.

இப்படிச் செய்யப்படுகின்ற உதவியானது பல சந்தர்ப்பங்களில் கைமாறு கருதாது செய்யப்பட்ட உதவியாக இருக்கின்றது. உதவி செய்கின்றவர்கள் கைமாறு கருதாமல் செய்தாலும் சிறியதாக இருந்தாலும் அது செய்யப்பட்ட சந்தர்ப்பம் கருதி , காலம் கருதி, அதனை மறவாது இருப்பதே மனித இயல்பு.

**காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தில் மாணப் பெரிது.**

செய்த உதவியானது சிறியது என்றாலும் அது தக்க சமயத்தில் செய்யப்பட்ட செயல் ஆதலால் அதனால் விளைந்த நன்மை மிகப் பெரியது ஆகும்.
உயிர்போகும் நிலையில் தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கும் பருக நீர் தந்தால் அவன் உயிர் காப்பாற்றப்படுகின்றது.
கொடுக்கப்பட்டது வெறும் தண்ணீர் தான். காசு இல்லாமல் கிடைப்பதுதான். என்றாலும் ஓர் உயிரைக் காப்பாற்ற அதனால்தான் முடிந்தது. இது காலத்தில் செய்யப்பட்ட உதவி. இதற்கு ஈடு எதனைக் கூறமுடியும். ஞாலமே தந்தாலும் இதற்கு சமன் ஆகாது. உதவி தினை அளவுதான். அதன் பயனோ பனை அளவு என்பதை மறுக்க முடியாது. எனவே அப்படிச் செய்த தூய உள்ளம் படைத்த நல்லோரின் தொடர்பை எப்போதும் மறக்கக் கூடாது.

அதுபோல நீ ஒருவர்க்கு நன்றி செய்யும்போது அதனை அவர் எப்போது திருப்பிச் செய்வார் என எண்ணிச் செய்யக் கூடாது. அப்படிச் செய்யும்போது உன்னுடைய நன்றியின் பெருந்தன்மை குறைகின்றது.
ஒருவர் தமக்கு ஒரு காலத்தில் உதவி செய்திருப்பின் அதனை மறவாது அதனை திருப்பிச் செய்யும்வண்ணம் மனதில் நினைத்திருப்பதே நல்லோர் இயல்பு. இதனையே ஔவையார்

**நன்றி ஒருவர்க்கு செய்தக்கால் அந்நன்றி**
**என்றுதருங்கொல் என வேண்டா நின்று**
**தளராவளர்தெங்கு தான் உண்ட நீரை**
**தலையாலேதான் தருதலால்**

என்னும் பாடல் மூலம் உணர்த்துகின்றார்.
அறம் எனக் குறிக்கப்படுவன பல அவற்றுள் நன்றி மறவாமை என்பது தலையாயது ஆகும். மற்ற அறங்களை மறந்தாலும் நீ மன்னிக்கப்படுவாய், ஆனால் நன்றி மறந்தால் அதற்கு மன்னிப்பே கிடையாது. தகாத செயல்கள் பல செய்தாலும் தாங்கிக் கொள்ள இயலும். ஆனால் செய்த நன்றியை மறந்து கேடு நினைத்தால் அதனைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. அவனைப் போன்ற பாதகன் இருக்க

முடியாது.
பிறருக்கு உதவி செய்வதைக் காட்டிலும் பிறர் நமக்கு செய்த உதவியை மறவாதிருத்தலே மேலானது. எனவே பிறருக்கு நன்றி செய்வோம். அதே சமயத்தில் பிறர் செய்த உதவியையும் மறவாது இருந்து நமது மனிதப் பண்பைக் கடைப்பிடிப்போம்.

இவ்விரு பக்கங்களும் லண்டன் முத்துமாரியம்மன் ஆலயத்தினரின் ஒத்துழைப்போடு அமைக்கப்பட்டுள்ளன. ஆலயங்களுக்கு இருபக்கங்களை ஒதுக்குவது என்ற எமது திட்டத்தின் நகர்வுக்கு மனமார உதவிசெய்ய முன்வந்த லண்டன் முத்துமாரியம்மன் ஆலயத்தினருக்கு எங்கள் நன்றிகள்.

–ஆசிரியர்–

# சிறந்த கட்டுரைக்கு நிறைந்த சன்மானம்

# "சிவயோகம்"

என்கின்ற தலைப்பில் சமூகவியலை சமயக் கண்கொண்டு பார்க்கும் சிந்தனாரீதியில் அமைந்த கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம். இதில் பெரியவர்கள் சிறியவர்கள் என்ற கட்டுப்பாடு இல்லை. சிறந்த கட்டுரைக்கு 100 பவுண்களுக்குக் குறையாத சன்மானத்தை வழங்க ரூட்டிங்கில் அமைந்துள்ள லண்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தினர் முன்வந்துள்ளனர்.அத்தோடு சிறந்த கட்டுரைகள் கலசத்தில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம். கட்டுரைகளோடு உங்கள் பெயர், விலாசம், பிறந்ததிகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

கட்டுரைகளை அனுப்பவேண்டிய முகவரி:

**LONDON SRI MUTHU MARIAMMAN TEMPLE**
**2ND FLOOR, 180-186 UPPER TOOTING ROAD**
**LONDON SW17 7EW**
**TEL: 0181 767 9881**
**FAX: 0181 767 2337**

# அருள்மிகுஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தேவஸ்த்தான உற்ஷவங்களும் திருப்பணிகளும்.



மேற்படி தேவஸ்தானத்தில் கடந்த மாதம் 21–9–98 முதல் 30–9–98 வரை நவராத்திரி உற்ஷவங்கள் தினமும் மாலை அபிஷேக ஆராதனைகள், விசேட நவசக்தி அர்ச்சனைகள், பஜனைகள் , சமய சொற்பொழிவுகள் , கலைநிகழ்ச்சிகளும் மிகுவிமரிசையாக இடம் பெற்று மானம்பூ உற்சவத்துடன் இனிது நவராத்திரி உற்ஷவம் நிறைவெய்தியது. அத்துடன் புரட்டாதி சனித்தினத்தை முன்னிட்டு பிரதி சனிக்கிழமைதோறும் காலை விசேட அபிஷேகம், ஹோமம், தீபாராதனைகள் அர்ச்சனைகள் அடியார்கள் எள்ளுத்தீபம் ஏற்றுதல் யாவும் மிகுசிறப்பாக இடம்பெற்று வருவதும் இம்முறை அடியார்கள் பெரும் திரளாக கூடியதும் குறிப்பிடத்தக்கது மேலும் கேதாரகௌரி விரதத்தினை முன்னிட்டு ஆலயத்தில் தற்போது விசேட அபிஷேகங்கள், பூசைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்விரத பூர்த்தி எதிர்வரும் 19–10–98 திங்கட்கிழமை தீபாவளி தினத்தன்று பகல் 10 மணியளவில் அபிஷேகம் பூசைகளுடன் விரத அன்பர்களுக்கு காப்பு வழங்கும் வைபவமும் பிற்பகல் 2 மணிவரையும் தொடர்ந்து ( இரவு பூசை முடிவுற்றதும் ) காப்பும் வழங்கப்படும். மிகவும் மகிமை பொருந்திய இவ்வரதத்தினை பல அன்பர்களும் நோற்று 20 நாட்களும் விரதமாக ஒரு நேரம் உணவு அருந்தி, 21 வது தினம் அமாவாசை தினத்தில் உபவாசமிருந்து 21 முடிச்சிட்ட காப்பினை கையில் அணிந்து விரதத்தினை பூர்த்தி செய்து கொள்வார்கள். இஃதினைத் தொடர்ந்து மேன்மையும் அனுக்கிரகமும் உடனுக்கு உடன் அளிக்கும் கலியுகவரதனுடைய (முருகப்பெருமானுடைய) கந்தசஷ்டி விரதம் எதிர்வரும் 21–10–98 புதன்கிழமை முதல்26–10–98 திங்கட்கிழமை வரை (சூரன்போர்) இடம்பெற்று 27–10–98 செவ்வாய்க்கிழமை பகல் பாறனை பூசையும் மாலை திருக்கலியாண உற்சவமும் திருவூஞ்சல் ஆகியவற்றுடன் இவ்வுற்சவம் இனிது முடிவுற உள்ளன.

மேலும் அருள் தரும் ஸ்ரீகனகதுர்க்கை அம்பாளின் ஆலய திருப்பணிவேலைகள் பல அன்பர்களின் நிதி உதவியுடனும் இனிது நிறைவேறி வருவதும் இன்னும் சில திருப்பணிகள் அன்பர்களுக்காக இருக்கின்றன இவைகளை அன்பர்கள் ஏற்று திருப்பணிகளை முடித்து எதிர்வரும் பங்குனி மாதம் கும்பாபிஷேகம் நடாத்துவதற்கு உதவுமாறு வேண்டப்படுகின்றார்கள். விபரங்கட்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

**எமது ஆலயத் திருப்பணிக்கு 75,00 பவுண்கள் தேவைப்படுகின்றன. அடியவர்களிடமிருந்து உதவி கேட்டு நிற்கின்றோம்.**

ஒரு அலகின் பெறுமதி 500 பவுண்கள். இப்பணத்தை திருவுருவச் சிலைக்கான செலவுகளைப் பொறுப்பெடுப்பதன் மூலம் செலுத்தலாம். ஆலய நிர்வாகிகளோடு தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

# இலண்டன் தமிழ் இலக்கிய மன்றம்.

20-09-98 ஞாயிற்றுக்கிழமை இலண்டன் வாழ் தமிழ் இலக்கிய ஆர்வலர்களின் முயற்சியால் ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் முன்றலில் மேற்படி மன்றம் அமைக்கப்பட்டது. இதன் அமைப்பாளராகத் திரு தணிகாசலம் அவர்களும் தலைவராகத்

திரு இராஜமனோகரன் அவர்களும் செயளாளராகத் திரு இரத்தினசிங்கம் அவர்களும் தெரிவாகியுள்ளனர். இவர்களோடு துணைத்தலைவராகத் திரு ஸ்ரீகாந்தலிங்கம் அவர்களும் துணைச் செயளாளராகச் செல்வி ஆறுமுகம் அவர்களும் தெரிவாகியுள்ளனர்.

## மன்றத்தின் நோக்கங்களாவன

இங்கிலாந்திலுள்ள இலக்கிய ஆர்வமுள்ளவர்களை ஒன்று சேர்த்தல்

அவ்வாறானவர்களின் இலக்கிய அறிவை வெளிக்கொண்டு வரத்தக்க களம் அமைத்தல்

சிறார்களின் தமிழ் அறிவையும் இலக்கிய அறிவையும் வளர்க்கவல்ல வகுப்புக்களை நடத்துதல்

இங்கிருப்போருக்கு இடையேயும் இலங்கை, ஈழம் உட்பட வெளியிலுள்ளவரோடும் பட்டிமன்றம் , கவியரங்கம், பேச்சுக்கள் , நாடகங்கள், போன்றவற்றை உலகின் எப்பகுதியிலாயினும் அமைத்தல்

மேற்கண்டவற்றை வானொலி தொலைக்காட்சிகளில் நடத்துதல்

இங்குள்ள ஏனையோரிடத்திலும் இலக்கிய அறிவையும் மேற்கண்ட ஆற்றல்களையும் வளர்த்தல்

இலக்கிய நூல்களை வெளியிடுதல்

சிறார்களின் இலக்கிய ஆக்கங்களை முன்னெடுத்துச் செல்லவல்ல இதழ்களை வெளியிடல் (ஆண்டொன்றுக்கு நான்கு)

புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள இலக்கிய அறிஞர்களையும் வெளிநாடுகளிலிருந்து இலண்டன் வரும் இலக்கிய அறிஞர்களையும் கௌரவித்தல்.

## உறுப்புரிமை.

இலக்கிய ஆர்வங்கொண்ட எவரும் உறுப்பினராகலாம். விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கு

1, Devon Close, Perivale , Middlesex, UB6 7DN

என்ற முகவரியோடு தொடர்பு கொள்க.

01-11-98 பிற்பகல் 3.00 மணிதொடக்கம் 5.00 மணிக்கிடையில் ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் முன்றலில் தீதும் நன்றும் பிறர் தர வாரா தலைப்பிலான கவியரங்கம் நடைபெறும்.

நன்றி

க. இராஜமனோகரன்


# சைவ சமய வகுப்பு

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4.00 மணி தொடக்கம் 5.45 வரைக்கும் அம்மன் சந்நிதியிலே சைவ சமய வகுப்புகள் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு

**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய**

**நிர்வாக சபை அல்லது**

**க. இராஜமனோகரன்**

**டொக்டர் ச. இராஜமனோகரன்**

**திருமதி வி. பரமகுமரன்**

***0181 810 0835, 0118 932 1438, 0181 900 1279***


5, Chapal Road, London W 13 9AE

# நகுலேஸ்வர ஆலய அழியாடுகளும் புனர்நிர்மாணமும்

சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்

மூர்த்தி , தலம், தீர்த்தம், முறையாய் தரிசித்தவர்களுக்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் நேர்படுபன் என்பது அனுபூதிச் செல்வர்கள் வாக்கு. இம்மூன்றும் மேன்மை பெற அமைந்த சந்நிதி கீரிமலை நகுலேஸ்வர ஆலயமாகும். இவ்வாலயம் மூர்த்தி ஸ்தல தீர்த்த விசேடம் பற்றி கூற எமக்கு நேர்ப்பட்ட சற்குரு நகுலமுனிவராவர். இவை பற்றி சூதசங்கீதை, மச்சபுராணம், ஸ்கந்தபுராணம், மற்றும் நகுலகிரிப்புராணம், நகுலாசல புராணம், நகுலேசமகாத்மியம் , கைலாகமான்மியம், ஈழமண்ட லசதகம், போன்றவை மூலம் சைவ உலகு அறிந்தவையே இந்நாட்டில் அதி புராதண ,ஈஸ்வரங்கள் ஐந்து உள்ளன. கிழக்கே கோணேஸ்வரம், வடக்கே நகுலேஸ்வரம், மேற்கே திருக்கேதீஸ்வரம் முன்னேஸ்வரமும் தெற்கே தொண்டீஸ்வரமுமாகும்.


வீணாகானாபுரம் என்று கூறப்படும் யாழ்ப்பாணத்தின்



வடமுனையில் உள்ள நகுலேஸ்வரம் , பாடல் பெற்ற புகழ் பூத்த திருத்தலங்களுக்கும், ஜோதிலிங்கத் தலங்கள் என்று கூறப்படும் சிவத்தலங்களுக்கும் ஈடு இணையான அருட்சக்தியும், பெருமையும் பெற்ற தலம் கீரிமலை நகுலேஸ்வரம். இதனை நாடிப் பாவவிமோசனத்திற்காகப் பல இடங்களிலிருந்தும் அடியார்கள் பயபக்தியோடு வருவார்கள். பயனும் பெறுவர். வடநாட்டு மோஷஸ் தலங்களான காசி, கயா ஆகிய சேஷத்திரங்களையும், தென்னாட்டில் இராமேஜ்வரம் முதலிய தல தீர்த்தங்களையும் நாடி, அடியார்கள் யாத்திரை செய்வது போல் இத்தலமும் தீர்த்தமும் பிரசித்தியானவையாகும். இப்படியான சைவசமயத்தவர்களது உயிர் நாடித்தலம் காலத்திற்குக் காலம் பல சோதனைக்குள்ளாகியது. அப்படியான சோதனைக்குள் ஒன்று 16–10–90, 18–10–90 , ஆகிய நாட்களில் நடந்த பாரிய விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல்களாகும். அத்தினங்களில் சுமார் 1000 பக்தர்கள் பெண்களும் ஆண்களும், சிறுவர்களுமாக கேதாரகௌரி விரதமனுஷ்டித்து , பூசை வழிபாடுகளில் தங்கள் ஐம்புலங்களையும் ஒடுக்கி ஒரே சிந்தனையாக இருந்தார்கள். அதே நேரம் பார்த்து இப்பயங்கரமான குண்டுகள் வீசப்பட்டன. தெய்வாதீனமாக உயிர்ப்பலிகள் ஒன்றும் நடைபெறாது நகுலேஸ்வரப் பெருமான் எல்லோரையும் காப்பாற்றியுள்ளார். பல்லாண்டு பல்லாண்டாக ஆண்டுக்கு ஆண்டு எழுச்சி பெற்றுவந்த திருத்தலம், சுற்றுச் சூழலும் மண்ணோடு மண்ணாகி வெறிச்சோடி விட்டது. தெய்வீகப் பொலிவுகாடும் மண்டிவிட்டது.


05–02–1997 வரை ஆதீனகர்த்தாவுக்கோ, அடியார்களுக்கோ ஆலயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது . எமது பலகால முயற்சியின் பயனாக யாழ் உதவி அரச அதிபருடன் சில பிரமுகர்களையும் ஆலயத்தைப் பார்த்து வர 5–2–1997 இல் அனுமதிக்கப்பட்டோம். அங்கு சென்று கண்ணால் பார்த்த காட்சியை விவரிக்கச் சித்தம் கலங்கியது. ஏன் இப்படியான நிலை சைவமக்களுக்கு நேர்ந்தது என்று சித்தங்கலங்கிக் கண்ணால் கண்ணீர் வழிய திகைப்புடன் நின்றோம். யார் யாரைத் தேற்றுவது என்று தெரியாமல் இருந்தது. இவ்வாலயத்தை சேதத்தைப் பற்றி எதில் ஆரம்பித்து எங்கே முடிப்பது என்று தெரியாத நிலையான அழிபாடுகள். தலை தலைமுறையாக வளர்ந்து வந்த ஆலயத்தின் தோற்றத்தையும் வழிபாடாற்றி வந்த தெய்வீக மூர்த்திகளின் சிதைவுகளையும் அத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலவிக்கிரகங்கள் (கல்லுவிக்கிரகங்கள்) உற்சவமூர்த்திகளும் , காணாமல் இருப்பதையும், பெறுமதிமிக்க பொருட்கள், தளபாடங்கள், வாகனங்கள், நூல்நிலையம், மற்றும் மின்சாரயந்திரம், ஆகியனவும் அழிபாடுகளுடன் காணாமல் போயிருக்கின்றதைப் பார்த்தோம்.

இவ்வாலய அழிபாடுகளை பற்றி எவ்வளவு என்று சரியான மதிப்பீடு போட முடியாமல் இருக்கின்றது. சுருங்கக்கூறின் ஆலயம் பழைய நிலைக்கு வரவேண்டுமாயின் புதிய சிருஷ்டி ஒன்று தோன்ற வேண்டும். ஆலய புனரமைப்புக்கு பலகோடி தேவைப்படுகின்றது. இதனை யாரோடு நோவோம் யாருக்குகெடுத்துரைப்போம் ஆண்டவன் தான் அருள்



பாலிக்கவேண்டும். அரசாங்கத்திற்கு யாம் செய்துகொண்ட பல முறைப்பாடுகளையொட்டி புனர்நிர்மானத்துக்கு உதவ ஒரு தொகை பணம் தருவதாகக் கூறியுள்ளனர். ஆனால் எழுத்து மூலம் கிடைக்கவில்லை. அரசாங்கம் எவ்வளவு தருவார்கள், எப்போது தந்து முடிப்பார்கள் என்பதைப் பற்றி கூறமுடியவில்லை. தற்போது சென்ற ஒரு மாசமாக சில தொண்டர்களுடன் சென்று ஆலய சுத்திகரிப்பு செய்வதற்கு இராணுவம் அனுமதித்துள்ளது. அதனைத் தொடர்ந்து புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றது.

ஆனபடியால் இந்த மாபெரும் திருப்பணி வேலைகளை ஒழுங்கான முறையில் கண்காணித்து துரிதகெதியில் திருப்பணி வேலைகளை நிறைவுசெய்து, எவ்வளவுக்கெவ்வளவு முன்கூட்டி மகாகும்பாபிஷேகம் நடைபெற்று, இப்பொழுது சூநிய நிலையில் இருக்கும் அருட்பிரவாகத்தை மீள உருவாக்கிவைக்க வேண்டும் என்பது எம் நோக்கமாகும். கீரிமலையைக் காணத் துடித்திருக்கும் அடியார் கூட்டத்தின் அவாவை நிறைவு செய்யவேண்டும் என்பதுவே எமது பேரவாவாகும்.



ஆகவே அன்பர்கள் அடியார்கள் எல்லோரும் ஒன்று திரண்டு தனித்தோ, அல்லது பகுதியாகவோ மேற்படி ஆலயத் திருப்பணிக்கு உதவி செய்து நகுலேஸ்வரப் பெருமானின் பூரண அனுக்கிரகத்தை பெற்றுய்வீர்களாக. உடனடியாக நடைபெறவேண்டிய திருப்பணிகள் விபரம் கீழ்ப் காண்பவையாகும்.

விநாயகர் ஆலயம்

சோமஸ்கந்தர் பண்டிகை அம்பாள் மூலஸ்தானமும் மண்டபங்களும்

மூர்த்திகள் உட்பட மகாவிஷ்ணு

பஞ்சலிங்கம் பண்டிகை

துர்க்காதேவி ஆலயம்

மகாலக்சுமி ஆலயம்

சண்முகர் ஆலயம்

நடேசர். (பண்டிகை இவ்விக்கிரகம் ஆலயத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கின்றது.

சனீஸ்வரன் ஆலயம்

நவக்கிரக ஆலயம்

வயிரவர் ஆலயம்

வசந்தமண்டபம்

யாகம்

நவதள ராஜகோபுரம்

சுற்று நான்கு பக்கமும் உள்ள கொட்டளைகள் மேற்படி மண்டபங்கள் புதிதாக நிர்மாணிக்க வேண்டியிருக்கின்றது. இத்துடன் பல திருப்பணிகளும் நடைபெற வேண்டியுள்ளது. வாகனங்கள் தேர் ஆகியனவும் இம்மதிப்பீடுகளில் அடங்குகின்றன. சொல்லப்போனால் மேற்படி ஆலயம் புதிதாக அமைக்கவேண்டும் இத்திருப்பணிக்காக ஒரு திருப்பணிச்சபை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

யாம் இப்பொழுது எடுத்திருக்கும் சுமையை முட்டின்றி முடிப்பதற்குச் சைவப்பெருமக்கள் யாவரினதும் உதவியை நாடி நிற்கின்றோம். முன்னவனை முன்வைத்தே இவ்வன்பு வேண்டுகோளை உங்கள் முன்வைக்கின்றேன்.

எல்லோருக்கும் ஸ்ரீநகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமிகள் பூரண அனுக்கிரகம் பெற பிராத்திக்கின்றேன்.

WITH BEST COMPLIMENTS FROM

# RAJA & CO

## SOLICITORS

ADMINISTRATORS OF
OATHS

295 BALHAM HIGH ROAD
TOOTING BEC, LONDON SW 17
TEL: 0181 682 2585 FAX: 0181 682 2575

# EDGWARE PHYSIOTHERAPY CLINIC

**Specialised Sports injuries**
**Run by an Experienced**
**Charted**
**Physiotherapist**

## KANESH NATHAN
## Ph.d. M.C.S.P S.R.P

10 The Drive
Edgware
Middlesex
HA8 8PT

TEL: 0181 958 9820
FAX: 0181 958 1244

# PRASAD SWEETS

**புதிதாகத் தயாரிக்கப்பட்ட லட்டு, மைசூர் பாகு, முறுக்கு, ஜிலேபி, மற்றும் சகலவழதமான சைவ இனிப்புவகைகள் எம்மிடம் கிடைக்கும்**

சகல நிகழ்ச்சிகளுக்கும் எம்மை நீங்கள் அணுகலாம்

**Always**
**Fresh & Best**

**222 Ealing RoadWembly, Middlesex**
**Tel: 0181 902 1704**

**168 Upper Tooting Road >London SW17**
**Tel: 0181 682 3363**

# திருவரங்கம்

## கவிஞர் ஞானமணியம்

நாயன்மார் காலத்தில் விஷ்ணு தலத்தை அரங்கம் என்றும் சிவதலத்தைக் கோயில் என்றும் அழைத்தனர். தென் தமிழ்நாட்டில் ஸ்ரீரங்கம் என்றால் திருச்சி மாவட்டத்தில் உள்ள திருப்பெருமாள் திருத்தலமே ஆகும். கோயில் என்றால் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரநாதன் சிவபெருமானின் திருக்கோயிலே ஆகும். இதுவே அன்றைய வழக்கமாகும்.

இந்தப் புராண வரலாற்று வழக்கத்தை நான் முன்னரும் கலசம் மூலம் குறிப்பிட்டுள்ளேன். சிதம்பர இரகசியம் என்னும் என் கட்டுரையில் விளக்கியுள்ளேன். சரித்திர மாற்றங்கள் காலத்துக்குக் காலம் மாற்றம் அடைந்துள்ள போதிலும் தென்தமிழ்நாட்டில் இன்றும் சிதம்பரமும் ஸ்ரீரங்கமுமே முதன்மையான தலங்களாக விளங்குகின்றன.

திருச்சி என இன்று வழங்கப்படும் திருச்சிராய்ப்பள்ளி மாவட்டத்தின் தலைநகரான திருச்சியிலிருந்து ஏறக்குறைய மூன்று மைல் தூரத்தில் உள்ளது திருவரங்கம்.

திருவரங்கத்தைச் ஸ்ரீரங்கம், மாலவன் கோட்டை, அரங்கன் மாளிகை, சயனக்கோட்டம் அரங்கம் , போக மண்டபம், யோகமண்டபம் , பூலோக வைகுண்டம், திருப்பள்ளிமாடம் என்றெல்லாம் புகழ்ப் பெயர்களால் அழைக்கின்றார்கள்.

காவேரி ஆற்றுக்கும் கொள்ளிடம் நதிக்கும் இடையில் ஸ்ரீரங்கம் அமைந்துள்ளது.

இதுபோல் சிதம்பரன் கோயிலும் காவேரி ஆற்றின் பிரிவுக்கு வடக்கிலும் மனிமுத்தா நதிக்குத் தெற்கிலுமாக இரு நதிகளுக்கும் இடையிலேயே அமைந்திருப்பது முதன்மையான இந்த இருதலங்களிலும் நாம் அவதானிக்கின்ற அற்புதமான தெய்வீகச் சிறப்பாகும்.

ஸ்ரீரங்கத்திற் கோயில் கொண்டுள்ள பரந்தாமனை ஸ்ரீரங்கநாதன், அரங்கநாதர், அழகியமணாளர், சயனரங்கன், அரங்கப்பெருமாள், பெரியபெருமாள், அரங்கநாயகர், அரங்கநாதப்பெருமாள் என்றெல்லாம் அழைக்கின்றனர்.

ஸ்ரீரங்கப் பெருமானுடன் அரங்கத்தில் அமர்ந்திருக்கும் ஆனந்தநாயகியை அரங்கநாயகி, திருவரங்க நாச்சியார், ஸ்ரீரங்கநாச்சியார், திருப்பெருமாட்டி ஸ்ரீரங்கநாயகி, ஸ்ரீதேவி, என்றெல்லாம் அழைக்கின்றனர்.

தென்னாட்டில்மட்டுமல்லாது இந்திய நாட்டில் மாத்திரம் அல்லாது உலகத்திலேயே மிகப்பெரிய திருமால் ஆலயமாக விளங்குகின்றது ஸ்ரீரங்கம். ஏழு சுற்றுப் பிரகாரங்களைக் கொண்டுள்ளது. திருவரங்கத்தின் திருமதில்களின் முழுநீளம் ஏறக்குறைய ஐந்தரை மைல்களாகும். தலம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பு நூற்றைம்பது ஏக்கராகும். அலங்காரமான சிற்பக்காட்சிகளுடன் இருபத்தொரு கோபுரங்கள் அமைந்துள்ளன. அற்புதமாகக் காட்சியளிக்கின்றன.

ஆலயத்தின் கிழக்கு முகப்பில் வெள்ளை வருணத்தில் வானளாவ வளர்ந்து நிற்கின்றது இராசகோபுரம். சுமார் 433 வருடங்களுக்கு முன்னர் விஜயநகரப் பேரரசு, ஸ்ரீரங்கப் பெருமானுடைய ஆலயத்தைப் பராமரித்து மதிப்போடு பரிபாலனம் செய்து வந்தது. பேரரசு செல்வப்பேறும் ஆள்கை உறுதியும் குன்றியதால் இராசகோபுரத் திருப்பணி இடையிற் தடைப்பட்டுவிட்டது. மிகநீண்ட காலத்துக்கு கோபுரத் திருப்பணி மீண்டும் தொடரவேயில்லை.

அண்மைக்காலத்தில் அகோபில மடத் தலைவரான அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகள் இராசகோபுரத் திருப்பணியை மீண்டும் ஆரம்பித்து முற்றுப்பெறச் செய்துள்ளார். இப்பொழுது உலகத்திலேயே மிக உயர்ந்த இராசகோபுரமாக விளங்குகின்றது. 236 அடி உயரத்தில் இந்த இராசகோபுரம் வானை முட்டியதாய் வளர்ந்து நிற்கின்றது.

பதின்மூன்று நிலைத்தளங்களை உடையதாய் அமைந்து விளங்குகின்றது.

பன்னிரண்டு ஆழ்வார்களான ஆண்டாள், குலசேகராழ்வார் , திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார். திருமழிசையாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், நம்மாழ்வார் , பூதத்தாழ்வார், பெரியாழ்வார், பேயாழ்வார் பொய்கையாழ்வார், மதுரகவியாழ்வார், அனைவரும் வைணவ சமயத்தின் மாண்பையும் புகழையும் மதிப்போடு வளர்த்தவர்களேயாவர்.

இந்தப் பன்னிரு ஆழ்வார்களிலும் மதுரகவியாழ்வார்

மட்டும் ஸ்ரீரங்கப்பெருமானை போற்றிப் புகழ்ந்து பாடியதேயில்லை. ஏனைய பதினொரு ஆழ்வார்களும் குன்றாத பக்தியோடு பெருமானைப் பாடிப்பாடிப் போற்றிப் புகழ்ந்து மன்றாடி முத்தி பெற்றனர் என்பது புராண வரலாற்றுச் சாசனங்களாகும்.


நம்மாழ்வரைத் தமது ஞானக்குருவாக ஏற்று மதித்து இனிதே போற்றியவர் மதுரகவியாழ்வார். மெய்ஞ்ஞானச் சோதியின் பிரதிவிம்பமாக விளங்கிய நம்மாழ்வாரின் ஞானக்கிரணங்களையே தெய்வீகச் சுடராக எண்ணிமன்றாடிப் பேரின்பம் எய்தியவர் மதுரகவியாழ்வார். ஞானக்குருவின் பாதங்களையன்றி ஏதொரு தெய்வத்தையும் பாடேன் என்று விரதம் பூண்டிருந்தார். அதனாலேயே ஸ்ரீரங்கப் பெருமானையும் பாடிப்புகழாமல் விட்டார். ஆயினும் அரங்கனை அவர் வணங்காத நேரமே இல்லை. இராமக்கிருஷ்ண பரமஹம்சரின் ஞானஒளி மோனத்திலேயே தெய்வீகப் பரம்பொருளைக் கண்டு தெளிந்து தெண்டனிட்டு மேன்மை கொண்ட விவேகானந்தரின் புனித வரலாற்றையே மதுரகவியாழ்வாரின் சரிதம் நமக்கு ஞாபகமூட்டுகின்றதல்லவா!

தென்னாட்டில் இன்று பன்னூறு வைணவத் தலங்கள் விளங்குகின்றன.

சிதம்பரப்பதியில் தில்லைக் கோவிந்தராயர்கோயில், திருச்சிமாவட்டத்தில் ஸ்ரீரங்கப் பெருமான் கோயில், கும்பகோணத்தில் சாரங்கபாணிகோயில், மதுரைமாநகர் எல்லைக்குள் கூடலழகர் கோயில் என்னும் பெருமாள்கோயில் , மதனகோபால சுவாமி கோயில், தெற்குக் கிருஷ்ணன் கோயில், வடக்குக் கிருஷ்ணன் கோயில், பிரசன்ன வெங்கடாசலபதிப்பெருமாள் கோயில், பழமுதிர்சோலை, மலையடிவாரத்திலுள்ள கள்ளழகர கோயில், சென்னை திருநீர்மலைத் திருமால்கோயில், பாரிமுனை பார்த்தசாரதி கோயில்,மாமல்லபுரம் வெங்கடேஸ்வரர் கோயில் முதலாகப் பலநூறு ஆலயங்கள் விளங்குகின்றன. இதுபோலவே நமது இலங்கை நாட்டில் சைவத்தமிழர் வாழும் ஊர்கள் தோறும் ஆங்காங்கே நூற்றுக்கணக்கான வைணவத் தலங்கள் அமைந்து விளங்குகின்றன. விஷ்ணுகோயில், மகாவிஷ்ணு கோயில், கண்ணன்கோயில், பெருமாள்கோயில், விஷ்ணுமூர்த்தி கோயில், நாச்சிமார் கோயில், மாதவன்கோயில், மாலவன்கோயில் என்னும் பெயர்களோடு விளங்குகின்றன.

இவ்வாறே இன்று மலேசியா, சிங்கப்பூர், மொறிஷியா போன்ற நாடுகளிலும் நம் தமிழினத்தவர் புலம்பெயர்ந்து வாழுகின்ற மேலைநாடுகளிலும் கண்ணபிரான் வழிபாடு பண்ணோடும் பக்தியோடும் பேணப்பட்டு வருகின்றது. சைவமும் வைணவமும் சங்கமமாகி இந்துமதம் என்னும் நாமம் தாங்கி வெண்குடை நீழலின் கீழ் இணைந்து வழிபடும் இனிய சுபிட்சம் ஏற்பட்ட பின்னரே எம்பெருமான் கிருஷ்ண பரமாத்மாவின் ஆலயங்கள் அங்கிங்கென்று மட்டுமல்லாமல் அகிலத்தின் அட்டதிக்குகளிலும் அமைந்துள்ளன. அருள்வளத்தை வழங்கிவருகின்றன.

சிவனையும் ஸ்ரீரங்கனையும் அரிஹரன் என்று பாடிப்பாடி
அஞ்சலித்துப் போற்றி நாடி
ஆனந்த வரப்பேறும் தேடி
பேரின்ப யோகப்பேறும் பெறுவோமாக
ஓம் நமசிவாய ஓம் நமோ நாராயண!



**கிழக்கு இலண்டன் நியூகாம் பகுதியில்**
**Dental Surgery சம்பந்தமான சகல பிரச்சினைகளுக்கும் அணுகவேண்டியவர்**

**டாக்டர் டேவிட் V. பழனிவேல்**

* Restorative Dentistry
* Prosthetics
* Orthodontics
* Endodontics &
* Surgical Dentistry

**127 Greengate, London E13 0BG**
**Tel: 0181 472 9429**

# VASAN & COMPANY

*Auditors & Accountants*

## Specialists in

* Accounts Preparation
* Book Keeping Services
* VAT, PAYE, Self Assessment
* Tax Planning * Tax Investigation

**78 BECKENHAM ROAD, BECKENHAM, KENT BR3 4RH**
**TEL: 0181 658 8867 FAX: 0181 658 8177**

# சைவ முன்னேற்றச் சங்கத்தின் செய்திகள்

## பாராட்டப்பட்டார்

சங்கத்தின் மனையாகிய நால்வர் மணி மண்டபத்தில் தமிழறிஞர் திரு க. உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கு சங்கம் அதன் சேவைப்பிரிவுகளான கலசம் நால்வர் வயோதிப நிலையம் ஆகியவற்றோடு இணைந்து பாராட்டுவிழா ஒன்றை வைத்து பெருமைப்பட்டுக்கொண்டது. இப் பாராட் டுவிழாவில் சங்கத்தலைவர் திரு இ. பத்மநாதன், கலசம் ஆசிரியர் திரு மு. நற்குணதயாளன், சங்கப் பொதுச்செயலாளர் திரு. ச. ஆனந்ததியாகர், அறங்காவலர் சபையைச் சேர்ந்த திரு வ. இ. இராமநாதன், உபதலைவர் திரு. என். நாகரத்தினம் திரு. இ. செல்லத்துரை ஆகியோர் சிறப்புரை ஆற்றி திரு உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களைக் கௌரவித்தனர். சங்கத்தின் அறங்காவலர்களில் ஒருவரான திரு டாக்டர் பாலசேகரம் அவர்கள் மாலையணிவித்துக் கௌரவித்தார். திரு உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களின் பதிலுரையோடு பாராட்டுவிழா இனிதே முடிவுற்றது.

## கந்தசஸ்டிவிரத வழிபாடு

எதிர்வரும் சங்கத்தின் கந்தசஸ்டி விரதவழிபாடு திரு ஆனந்ததியாகர் அவர்களது இல்லத்தில் வழமைபோல் சிறப்புற நடைபெறும். அனைவரும் சமூகந் தந்து முருகப்பெருமான் அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்

## புத்தக வெளியீடு

திரு க. உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்களின் அதிதீரன் எனும் புத்தகம் லண்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் வைத்து வெளியிடப் பெற்றது. விழாவின்போது புத்தகத்தின் உள்ளடக்கத்தை திரு சிறீக்கந்தராசா அவர்கள் ஆய்வுசெய்தார். மேலும் பலர் சிறப்புரையும் மதிப்புரையும் ஆற்றி விழா சிறப்பாக முடிவுற்றது.

## கலசம் சந்தாப் படிவம்

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். இத்துடன் அதற்கான..................................(பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

Name:.....................................................

Address...................................................

.............................................

.............................................

**UK & EUROPE £10 Only for Two years**

**Others- £14.00 Only for Two Years.**

Please make cheque/postal orders payable to SMS(UK)

No Stamp Needed
KALASAM
**FREE POST**
3, The Orchard
Wickford
Essex, SS12 9BR

நியாய விலைக்கு இலண்டனில் ஒரே தங்கமாளிகை

# Western Jewellers

*Jewellers & Gem Merchants*
*Specialist in 22ct Gold Jewllery*



பொன்னுருக்கலுக்
கான சகல
வசதிகளும் உரிய
முறைப்படி செய்து
கொடுக்கப்படும்.

அசல் 22 கரட்டிலான எல்லாவித நகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்.

1500 ஸ்ரேலிங் பவுண்களுக்கு ஒரே முறையில் நகைகள்
வாங்குவோருக்கு 8 கிராம் தங்க நாணயம் இனாமாக வழங்கப்படும்

1000 ஸ்ரேலிங் பவுன்களுக்கு நகைகள் வாங்குவோருக்கு
ஒரு சோடி தோடும் ஜிமிக்கியும் இனாம்

**வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்**

**230 Upper Tooting Road, Tooting, London SW17 7EW**
**Tel: 0181 767 3445 Fax: 0181 767 3753**
Web:http://www.luxmi.com/western

# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**
**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

## MAIN AGENT FOR AIRLANKA

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

# GLEN CARRIERS LIMITED

## MOST COMPETITIVE FARES TO COLOMBO AND OTHER DESTINATIONS

| | | |
|---|---|---|
| TO NOVEMBER 98 FROM: | COLOMBO<br>£450<br>PLEASE ASK FOR CONDITIONS<br>(VALIDITY ONE YEAR)<br>£425 | MADRAS TRIVENDRUM<br>FROM £430<br>£435 |
| 01 TO 05 DEC, 24 DEC TO 24 MARCH 05 APRIL TO 30 JUNE- 09 AUG TO 30 NOV 99 | 3 MONTHS VALIDITY £395 | NO STOP OVER IN COLOMBO £405 |
| 06 DEC TO 16 DEC 98, 25 MARCH TO 04 APR 99-01 TO 10 JULY 99 02 TO 08 AUG 99 | £500 | £510 |
| 17 TO 23 DEC 98-11 JULY TO 01 AUG 99 | £575 | £585 |
| ADV.PURCHASE | £555 | £565 |
| 01 SEP TO NOV 98 VALID FOR 03 MONTHS | BANGKOK SINGAPORE KUHALALUMPUR | £450 STOPOVER PERMITED IN COLOMBO |

PLEASE RING US FOR OTHER FARES ON GOLF, EMIRATE KUWAIT ROYAL JORDANI AND QATAR
ALL FARES EXCLUDING AIRPORT TAXES,- CREDIT CARD ACCEPTED SUBJECT TO CONDITIONS

FARES SUBJECT TO CHANGE WITHOUT NOTICE

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**
**Tel: 0181 740 8379/ 0181 749 0595Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca**
**BONDED WAREHOUSE**
**LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576**



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 19. 10. 98 அன்று வெளியிடப்பட்டது.